

# சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## - 2014 -

சிறுப்பிட்டி வல்லையப்புலம்
ஸ்ரீ கருணாகடாக்ஷி (மனோன்மணி)
அம்பாள் தேவஸ்தானம்
31.08.2014

Jashintha. JK

உ

சிவமயம்

அம்மா துணை

## சிறுப்பிட்டி வல்லையப்புலம்
## அருள்மிகு ஸ்ரீ கருணாகடாக்ஷி (மனோன்மணி)
## அம்பாள் தேவஸ்தானம்

# சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேக
# மலர் - 2014 -



**வெளியீடு**

**அருள் மிகு ஸ்ரீ கருணாகடாக்ஷி அம்பாள் தேவஸ்தான**

**தர்மகர்த்தாக்களும், பரிபாலன சபையினரும்**

**ஜய வருடம் ஆவணித் திங்கள் 29ம் நாள்**

**14.09.2014**

# நூல் வெளியீட்டுத் தரவுகள்


நூல் : சம்ப்ரோக்ஷண மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

வெளியீட்டு நாள் : 14.09.2014

தாள் : கெண்யா பாங் (80gsm)

அளவு : B5

பக்கங்கள் : VI + 50

வெளியீடு : **அருள் மிகு ஸ்ரீ கருணாகடாக்ஷி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாக்களும், பரிபாலன சபையினரும்**

அட்டைப்படம் : இரத்தினம் தனுசன்
(உரிமையாளர் தர்சா தமிழ்ப் பதிப்பகம்)

அச்சமைப்பு : தர்சா தமிழ்ப் பதிப்பகம், ஆவரங்கால் சந்தி அச்சுவேலி.
(ஆஸ்பத்திரி முன்பாக அச்சுவேலி)
தொலை பேசி: 021 2058206, 077 2583728
மின்னஞ்சல்: tharshaoffset@yahoo.com, ttpatchuvely@gmail.com

பிரதிகள் : 300

## கும்பாபிஷேக பிரதிஷ்டா குருமணியின் ஆசி உரை

திருச்சிற்றம்பலம்

உடம்பினை முன்னம் இழக்கு என்றிருந்தேன் உடம்பினுள்ளே ஒரு பொருள் கண்டேன் உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று உடம்பினை யான் இருந்து ஊம்புகின்றேனே.

சிவபூமி என விளங்கி வரும் ஈழமணித்திருநாட்டின் மகுடமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் சிவநேயச் செல்வர்கள் விளங்கும் சிறுப்பிட்டிப் பதியில், தன்னை நாடி வழிபடுகின்ற அடியவர்களுடைய இடர்களைக் களைந்து அருள்மாரி பொழியும் கருணாகடாக்ஷி அம்பிகையின் திருவருளினாலே மஹாகும்பாபிஷேகம் என்னும் பெரும்சாந்தி விழா இனிதே நடைபெற்றது. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்ற மணிவாசகர் வாக்கிற்கமைய, எங்களை எல்லாம் ஆட்கொண்டு அருள் செய்த அம்பிகையின் பாதம் பணிந்து அடியவர்களுடைய பக்தி நெறி, அறநெறி வளரவும், குடமுழுக்கு நடைபெற முன்நின்று உதவி செய்த நல்ல உள்ளம் படைத்தோருக்கும் காசி விஸ்வநாத பெருமானுடைய அருளும், கருணாகடாக்ஷி அம்பிகையின் அருளும் நிரந்தரமே கிடைக்க இறைபதம் பணிந்து ஆசிகூறுகிறேன்.

அம்பிகையை சரண் அடைந்தால்
அதிக வரம் பெறலாம்.

திருச்சிற்றம்பலம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத்தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்தும் காணா மணிவிளக்கே

இலங்கை மணித் திருநாட்டில் சைவர்களும் தர்மவான்களும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண மாநகரத்தில் சிறுப்பிட்டி என்னும் கிராமத்தில் அகில லோக மாதாவாக விளங்கும் அம்பிகை, கருணாகடாக்ஷி என்னும் திவ்யமான நாமம் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் அம்பிகைக்கு திருக்குடமுழுக்கு விழா இனிதே நடைபெற்றது. திருவருள் நிறைந்த உன்னதமான மஹாகும்பாபிஷேகம் நடைபெற முன்னின்று பணிபுரிந்த ஆலய பரிபாலன சபையினர், மீளா அடியவர்கள் தொண்டர்கள் என அனைவருக்கும் அம்பிகையின் அருளும் காசி விஸ்வநாதப்பெருமானின் அருளும் பரிபூரணமாக கிடைக்கப்பெற இறைபதம் பணிகிறேன்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி

## கும்பாபிஷேகத்தின் சிறப்புக்களும் நன்றி நவிலலும்

பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோ ரானந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே

உலகத்து உயிர்களெல்லாம் உய்யவேண்டிப் பரமகருணாநிதியாகிய இறைவன் அருளிச்செய்தம நூல்களே வேதசிவாகமங்களாகும். வேதம் பொதுவென்றும் ஆகமம் சிறப்பென்றும் சொல்லப்படுகின்றன. வேதங்களில் இறைவனின் பொது இலக்கணங்களும், வழிபாடுகளும் கூறப்பட்டுள்ளன. ஆகமத்தில் மூர்த்திகளும் வடிவங்களும் அவற்றிற்குரிய தியானங்களும், அமைத்து வழிபடவேண்டிய முறைகளும், ஆலய அமைப்புவிதிகளும் பரவக் காணலாம்.

வேதங்கள் எப்படி நான்காக அமைந்துள்ளனவோ அவ்வாறே ஆகமங்களும் இருபத்தெட்டாக இடம்பெற்றுள்ளன. இவற்றுள் கர்ஷணாதி பிரதிஸ்டாந்தம், பிரதிஸ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் எனப்பகுதிகள் அமைந்துள்ளன.

சொரூபத் திருமேனியாகிய இறைவனைத் தடத்தத் திருமேனியாக்க வேண்டுவதே கும்பாபிஷேகம். சொரூப நிலை, மனத்தால் நினைக்கவும், வாக்கால் சொல்லவும் முடியாத அநாதிமுத்தசித்து உருவாய நிலை ஆகும். இந் நிலையில் இறைவன் ஒன்றிலும் தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய்த் தன் உண்மை நிலையில் நிற்பான்.

சொருப நிலையிலுள்ள இறைவன் ஐந்தொழில்களைச் செய்யத் திருமேனி கொண்ட நிலையே தடத்த நிலை ஆகும். இவ்வழிபாட்டைச் செய்யும் இடம்தான் யாகசாலை ஆகும். அனாதிமல முத்தராகிய (விடுபட்ட நிலை) இறைவன் ஏகனாய் இருந்தபோதிலும் அனாதிமல பெத்தராகிய (கட்டுப்பட்ட நிலை) ஆன்மா வழிபட்டுய்ய அட்டமூர்த்தியாய் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டு வடிவங்களையும் எடுப்பதைக் குறிப்பதே யாகசாலையின் எட்டுக் குண்டங்களாகும்.

“வட்டக்குண்டத்து எரியோம்பி” என்றவாறு வட்டக் குண்டம் பிரதான குண்டமாகும். இக் குண்டத்தில் வேண்டும் இறைவனை மந்திர தியானாதிகளால் வழிபாடாகுதிகள் செய்வர். இவ் யாகசாலையில் ஒற்றித்த நாட்களும் இரட்டித்த காலங்களுமாகப் பூஜைகள் அமையும்.

இவ்வாறு பூஜை செய்யப்பெற்ற கும்பமூர்த்திகள் நன்னாளிலே ஸ்தூல லிங்கமாகிய விமானத்துக்கும், சூக்குமலிங்கமாகிய மூல மூர்த்திக்கும் மந்திர ஆராதனையுடன் அபிஷேகித்தல் கும்பாபிஷேகமாகும்.

இக்கும்பாபிஷேகத்தைச் செய்ய ஆலய அமைப்பிலும் பலவிதிகள் இடம்பெற்றுள்ளன. புதிதாக ஆலயம் அமைத்தல், காலத்தினால் மறையப்பெற்றுப் பின் நிச்சயித்து ஆலயத்தை அவ்விடத்தில் அமைத்தல், அழிந்த ஆலயத்தைப் புதிதாக அமைத்தல், என்பனவும், பிராயச்சித்தாதி கருமங்களுக்காகச் செய்யப்படும் கும்பாபிஷேகங்கள் என இவை நான்கு வகைப்படும்.

இவை முறையே ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என்பனவாகும். இவ்வாறு கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற மூர்த்திகளை நிலைக்களமாகக் கொண்டு, ஆன்மாக்களின் வழிபாடுகட்கமைய, அவரவர் பக்குவ நிலைக்கேற்றவாறு, இறைவன் முத்தி நிலையை அருளுவர். எனவே கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பது மானுடப்பிறவியின் பெரும்பயனாகும்.

இந்தவகையில், எமது கருணாகடாக்ஷி மனோன்மணி அம்பாளின் ஆலயத்தில் கடந்த மூன்று வருடங்களுள் இருவகைக் கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளன. 2011இல் மூன்றாவது வகையான கும்பாபிஷேகமும், 2014இல் நான்காவது வகையான கும்பாபிஷேகமும் நடைபெற்று முடிந்துள்ளன. 2011 இல் நிகழுப்பெற்ற கும்பாபிஷேகத்தில் வைரவர் சந்நிதானம் புதிதாக அமைக்கப்பட்டதும், காத்தவராயர் சந்நிதானம் முன்னைய இடத்தை விலத்தி கிழக்கே முன்னகர்த்தி அமைக்கப்பட்டதும், 2014இல் நிகழுப்பெற்ற கும்பாபிஷேகத்தில், நவக்கிரக மூர்த்திகட்கான சந்நிதானம் புதிதாக அமைக்கப்பட்டதும், பழைய சபை விலக்கப்பட்டு அது சிவலிங்கப் பெருமானின் சந்நிதானமாக மாற்றப்பட்டு அதற்கான நந்தி பலிபீடம் புதிதாக அமைக்கப்பட்டதும், மூலமூர்த்திக்கான நந்தி, சிம்மமாக புதிதாக அமைக்கப்பட்டதும், இரு கும்பாபிஷேகங்களிலும் இடம்பெற்ற விஷேட அம்சங்களாகும்.

31.08.2014இல் எதிர்பாராத அனர்த்தத்தின் காரணமாக இடம்பெற்ற சம்புரோஷண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நிறைவேறியுள்ளது. அதேபோல் 02.09.2011 இல் இடம்பெற்ற புனராவர்த்தன சம்புரோஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நிறைவேறியமையும் நினைவு கூரத்தக்கது.

எது எப்படியிருந்த போதும், 31.08.2014 இல் நிகழுப்பெற்ற கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நிறைவேறியுள்ள இந்த நிலையில், இவ் ஆலயத்தின் வளர்ச்சியில் பலவழிகளிலும் உதவிய அன்பர்கள், அடியவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிகழ்வுகளில் நிறைந்து நின்று பணியாற்றிய அத்தனை அடியவர்கட்கும், பெருநிதியையும் பொருள்களையும், சரீர உதவிகளையும் வழங்கிய அனைவரும் நன்றியோடு நினைவு கூரப்பட வேண்டியவர்களன்றோ.

கடல் கடந்து சென்றாலும், எமது மதத்தையும் கலாச்சாரத்தையும் மறக்காது மதித்துப் பெருந்தொகைப் பணத்தை, 2011இல் நிகழப்பெற்ற கும்பாபிஷேகத்துக்கு முன்னதான பாரிய திருப்பணி வேலைகட்கும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆலயத்தின் தெற்குப் பக்க கொட்டகை வேலைக்கும், களஞ்சியம் மடப்பள்ளி அமைந்த கட்டிடம், கூரை ஆகியனவற்றின் புனரமைப்புக்கும், இவற்றிற்கு தீந்தை அடிப்பதற்கும் உரிய நிதிப்பங்களிப்பை பெரிய அளவில் வாரி வழங்கிய அன்பு உள்ளங்கட்கு எமது இதயபூர்வமான நன்றிகள். அவர்கள் ஆலய சூழலைச் சேர்ந்தமையும் சிறப்பானது. அதேபோல் 2011இல் நிகழப்பெற்ற மஹாகும்பாபிஷேகம், 2014இல் நிகழப்பெற்ற இக்கும்பாபிஷேகம் ஆகியன சிறப்புற்று நிறைவுபெற சண்முகப்பெருமானின் திருவருளோடு, லிங்கேஸ்வரப்பெருமானின் பெருங்கருணைத் திறமும் கிடைக்கப்பெற்றதல்லவா? அந்தவகையில் இறைவனின் திருவருட் திறனுக்கு நாம் அடி பணிகின்றோம்.

உரிய காலத்தில் மூலாதார அம்பிகையின் திருவுருவம், நவக்கிரக மூர்த்திகள் திருவுருவங்கள், நந்தி, சிம்மம், பலிபீடம், மற்றும் ஆவுடையார் போன்றவற்றைத் தந்துதவியவர்கட்கும், நவக்கிர மூர்த்திகள் சன்னிதானத்தை பார்த்தோர் மனங்கவரும் வண்ணமாக அழகுற அமைத்துத் தந்த கட்டடப் பகுதியினர், தீந்தை வேலைப்பகுதியினர், 2011-2014 காலப்பகுதியில் இடம்பெற்ற திருப்பணி வேலைகளில் முக்கியமாக கூரைவேலைப்பகுதியில் சிறப்பாக தொழிற்பட்ட தச்சுவேலைப்பகுதியினர், கட்டடப் பகுதியினர், மற்றும் இதனோடு தொடர்புபட்ட அனைவரும் எமது நன்றிக்குரியவர்கள். பணத்தை பாரிபோல் வாரி வழங்கியோரையும், இப்பணிகளை மேற்கொண்டோரையும் நன்றி பாராட்டும் இவ்வேளையில், இவ்விரு தரப்பினரையும் இணைத்து, அனைத்து வேலைத்திட்டங்களையும் ஒருங்கமைத்து நிறைவேற்றிய பரிபாலன சபையின் முதுகெலும்பை மனதாரப் பாராட்டவேண்டுமல்லவா? பாராட்டுகிறோம்.

கும்பாபிஷேக கிரியா கைங்கரியங்களை அற்புதமாக நிறைவேற்றி அருள்விளக்கம் ஏற்படச் செய்த சர்வபோதகாசிரியர், சாதகாசிரியர், பிரதிஸ்டா பிரதமகுரு மற்றும் ஏனைய சிவாச்சாரிய பெருந்தகைகள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கங்கள். விஷேடமாக இந்தியாவில் மதுரை மீனாட்சி அம்பாள் பரம்பரைக் குருத்துவமுடைய U.K இல் தற்போது வசித்துவரும் சிரோன்மணி சிவாகம பூஷணம் சிவஸ்ரீ சந்திரசேகர சிவாச்சாரியார் அவர்கள், வேதபாராயணமூலம் அனைவரையும் மெய்மறக்கச் செய்து, அனைவரும் மனங்கசிந்துருகும் வண்ணம் ஆக்கித் தந்தமைக்கு எமது மனப்பூர்வமான நன்றிகள். இதுக்கெல்லாம் காரணகர்த்தாக அமைந்து, கும்பாபிஷேகத்தை ஒரு புதுமெருகுடன், பார்த்தோர் மனம் நெகிழும் வகையில்,

நிறைவேற்றித்தந்த பெருந்தகை முத்தமிழ் வித்தகர் சிவாச்சார்ய சிரோன்மணி சிவஸ்ரீ லம்போதரக் குருசாமிக் குருக்கள். U.K இல் வேல்ஸ் ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான ஆஸ்தான குரு, எல்லோரினதும் பாராட்டையும் பெற்று நன்றிக்குரியவராகிறார். குறிப்பாக கும்பாபிஷேக தினத்தன்று பிரதான கும்பம் வீதிப்பிரதட்சனத்துக்காக எழுந்தருள முன்னதான பிரதிஸ்டா பிரதமகுருவின் வேதபாராயணம், அவருடன் சாதகாசிரியரினது வேதபாராயணம் ஆகிய இணைந்து அனைவரையும் மெய்மறக்கச் செய்துவிட்டன. மேலும் எமது ஸ்தான குருவுக்கும் நன்றிகள். சர்வபோதகாசிரியராக, எமது ஆலயத்தின் கடந்தகால நினைவுகளை மீட்டெடுக்கும் வகையில் தனது தந்தையார் குருமூர்த்திக் குருக்களின் பெயர் விளங்க, வருகை தந்து அனைவரையும் ஆசீர்வதித்து சிறப்பித்துச் சென்றுள்ள வேதசிவாகம வித்தகர், பிரம்மஸ்ரீ காமாட்சி சுந்தரேஸ்வரக் குருக்களுக்கும், வேறு நிகழ்வின் பொருட்டு இலங்கை வந்திருந்தபோதும் எமது கும்பாபிஷேக நிகழ்வுபற்றி கேள்வியுற்று அனைத்தையும் புறந்தள்ளி, எமது கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு சிறப்பித்துச் சென்றுள்ள ராம் கங்காதரக் குருக்கள் U.K அவர்கட்கு விஷேட நன்றிகள்.

மூன்று தினகங்களும், மங்கல வாத்தியத்தை சிறப்பாக வழங்கியவர்கட்கும், சிறப்பாக ஒலியமைப்பை மேற்கொண்டவர்கட்கும், ஒளியமைப்பைச் சிறப்புற செய்தவர்கட்கும், நிகழ்வுகளை கலாசார உடையில் நின்று ஒளிப்பதிவு செய்தவர்கட்கும், யாகசாலையை சிறப்புற அமைத்து தந்தவர்கட்கும், யாகக் கிரியைகளில் யாக சம்ரக்சகர்களாக திருப்பணி ஆற்றியோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். சுவாமி அலங்காரத்தை சிறப்புற மேற்கொண்டு வரும் புத்தூர் சிவராசா ஐயர் மகன் சரவணன் ஐயா அவர்கட்கும் நன்றிகள்.

மிகவும் குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் எமது சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளிவர தமது பதிப்புசார் வேலைகளை செவ்வனவே செய்து தந்த அச்சுவேலி தர்சா தமிழ்ப் பதிப்பக நிறுவனத்தாருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் புதிதாக பிரதிஸ்டை செய்யப்பட்ட காசி விஸ்வநாதப் பெருமான் திருவுருவும், ஆவுடையார், நந்தி, சிம்மம், பலிபீடம், மற்றும் நவக்கிரகமூர்த்திகள் திருவுருவங்கள் ஆகியவற்றுக்கும், நவக்கிரக மூர்த்திகள் சன்னிதானம் அமைக்கவும் நிதியுதவி அளித்தவர்கட்கும் நன்றிகள்.

கும்பாபிஷேகத்துக்கு முன்னதான ஆயத்த நிகழ்வுகளிலும், தொடர்ந்து இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வுகளிலும், பின்னதான நிகழ்வுகளிலும் தோளோடு தோள் நின்று செயற்பட்ட அனைத்து அன்புள்ளங்கட்கும் எமது இதய பூர்வ நன்றிகள் கூறி, இதனை நிறைவு செய்வோமாக.

நன்றி


































# முன்னுரை

அழகு கொஞ்சி விளையாடும் ஆசியாக் கண்டத்தில் இந்துச் சமுத்திரத்தின் முத்தான எங்கள் இலங்கைத் திருநாட்டில் இந்துச் சமயத்தினையும், கலாச்சாரத்தையும் பறைசாற்றி நிற்பதற்கு பல ஆலயங்கள் போற்றப் பெறுகின்ற இதில் சம்பிரதாயத்தை பேணுவதிலும், இந்து கலாச்சாரத்தினை பேணுவதிலும் முதன்மையாக விளங்கி நிற்பது "கருணா கடாக்ஷி" அம்மன் திருக்கோயில். இத்திருக்கோயில் வேதபுராண இதிகாச சரித்திர காவிய ஸ்தோத்திரத்திற்கு அதீதமாய் சரித்திரக் காலத்திற்கு முன்பிருந்தே அநேக சம்பிரதாயத்துடன் அநேக ஆதாரத்துடன் வைகானச ஆகம சாஸ்த்திர முறைப்படி பூஜை நெறிமுறைகளை கடைப்பிடித்து வருகின்றது.

இந்த உலகத்தில் உருவமாக இருக்கக்<br>
கூடியவளே அம்மா உனக்கு நமஸ்காரம்!!<br>
நீயே நித்தியமானவள் உன்னாலே உலகம் முழுதும்<br>
வியாபிக்கப்பட்டிருக்கின்றது தேவி<br>
உனக்கு நமஸ்காரம்!!

என்னும் புராணக் கூற்றுப்படி இந்த ஷேத்திரத்திற்குச் சமமான ஷேத்திரம் இல்லை. இந்த தெய்வத்திற்குச் சமமான தெய்வம் இல்லை. இவள் புகழ் பாடி குறையென்று நாடி வரும் பக்தர்களெல்லாம் குறை நீங்கி வாழ்வெல்லாம் செல்வம் செழித்து வாழ்ந்திடுவார்களே!!

இவ் எம் அம்மா கருணா கடாக்ஷியினதும், காசிவிஸ்வநாதரதும் திருக்கோயில் எண்ணற்ற உற்ஸவங்கள், பூஜைகள் வெகு வைபவமாக தினம் தினம் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றினை நேரடியா பார்க்கமுடியாத பக்தர்களுக்கு ஆலயத்தின் மகிமையை அறியும் முகமாக "ஸ்ரீ கருணா கடாக்ஷி" அம்மன் தேவஸ்தானம் "ஸ்ரீ கருணா கடாக்ஷி" அம்மனின் புகழை மக்கள் மனதில் வேரூண்டும் முகமாக இந்நூலை தர்மகர்த்தாக்களும் ஆலய பரிபாலன சபையின் அங்கத்தவர்கள் ஆகிய நாம் வெளியிட முயன்றுள்ளோம்.

இந்நூலினால் ஆலயத்தின் சித்திகரித்து தோன்றி நிற்கும் ஆன்மீக ஆனந்தத்தை, தெய்வீக உணர்வினை உண்டுபண்ணி நிற்கும் என்பது எங்கள் அளவற்ற நம்பிக்கையாகும்.

ஸ்ரீ கருணா கடாக்ஷி அம்மன் புகழ் கூறும் இச்சிறுநூல் மூலம் அம்மனின் அருளின் பெறுமையினையும், நித்திய சேவைகளையும் படித்து ஸ்ரீ கருணா கடாக்ஷி அம்மனினதும் காசிவிஸ்வநாதரதும் ஆலய வரலாறுகளையும் சிறப்பித்து தொகுத்து வழங்கியுள்ளோம்.

இதனை பக்தர்கள் தம் இல்லங்களிலிருந்தே ஸ்ரீ கருணா கடாக்ஷி காசிவிஸ்வநாதரதும் ஆளுமையினையும் அருளையும் பெற்றுக் கொள்வீராக. என்ற நம்பிக்கையுடன் நாம்.

## புதியதாய் பூத்தெழுந்த என் அப்பன் சிவலிங்கப் பெருமான்

சிறுப்பிட்டி வல்லயபுலத்தின் தன்துணையாள் தனியாய் வீற்றிருந்து பக்த அடியார்களுக்கு அருள்நல்கும் அழகினைக் காணவா இல்லை தன் இடமே உடல் பங்கினை தாரைவார்த்து தந்த விட்டேன் நொடியும் உன்னைப் பிரியமாட்டேன் என்றா இந்த கருணா கடாக்ஷி அம்மனின் துணையாளன் எம் பெருமான் அண்ணாமலை நாதா, சிவலிங்கேஷா நின்னருள் பார்வை படவே யாம் அனைவரும் பெரும் பாக்கியம் செய்திட்டோம். உன் திருச்சிலையுருவத்தின் நிழல் சற்றுப்படதா எம்மண்ணில் என ஏங்கித் தவித்தது உன் செவிகளுக்கு எட்டி விட்டதா எம்பெருமானே என் தில்லைவாச நடராஜப் பெருமானனே. உன்னை வாழ்த்தி வரவேற்கின்றோம் எம்மண்ணுக்கு

என்னப்பன் லிங்கப் பெருமானே!!
காசியில் உதித்தவனே!!
நர்மதை நதியில் தவசிகள்
முனிவர்கள் கைப்பிடித்தனர்
48 நாட்கள் விரதம் !!
அதைக்கண்டு எம்பெருமானே நீ
மெய்மறந்து !! நர்மதையின் நதி
அலைமேல் உருண்டோடி
தவழ்ந்து வந்தாயோ எம் குறைத் தீர்க்க
உன் புகழ் வைகம் புகழ

கேட்டிருக்கின்றோம் செவிக்குளிர
நின் பிரதி விம்பம் இம்மண்ணில் பட
தூசாகும் தவிடுப் பொடியாகும் எம்
முன்வினையனைத்தும்....!!
எம் வினைத் தீர்தருள தன் இடபவாகனம் (நந்தி)
உடன் அருள் பாலித்து எழுந்தருள
இருக்கின்றார்!! ஒன்பது கிரகங்களின்
தோஷங்களின் தோஷங்கள்
அப்படியொருப் புகழாய் விளங்கும் நர்மதை
நதிக்கரையில் கண்டெடுத்து கைத் தொட்டு தெய்வச்
சிலைகளாய் கண்திறந்து நிற்கின்றது
சிறுப்பிட்டி வல்லயபுலம் ஸ்ரீ கருணா கடாக்ஷி
அம்மன் தீர்த்தக் கரைதன்னில்!!

வாட்டுகின்றன வறுமையிலே ஒரு வேலை
பசிதீர்த்து பஞ்சம் விரட்ட பணமில்லை - பின்
எப்படி ராமேச்சரம் சென்று காசி நீர்தன்னில்
முன் வினைக்கரைத்து வருவது என்றெண்ணும்
நெஞ்சங்கள் பல!! உன் மனம் அறிந்ததால்
தான் என்னவோ அந்த "ஸ்ரீ கருணா கடாக்ஷி"
அம்மன் பாதம் தன்னில் சுரத்து ஓடுகின்றது
நர்மதைநதிக்கு ஒத்திய காசி புனித தீர்தமாய்
சிறுப்பிட்டி வல்லயபுலம் ஆலயத் தீர்த்தம்!!

தீராத பிணிகள் தீருமே இக்கங்கைகரையில்
நின்றாலே!! சொல்லா துயரங்கள் எம்மில்
இமயமாய் நிற்க!! நீர்பட்ட உப்புக்கல்லாய்
கரைந்துவிடும் கங்கை தன்னில்!!

பக்தர்கள் அனைவரும் நீங்கள், நாங்கள் என்று ஒன்றுகூடி கங்கையின் புனிதம் அறிந்து விட்டோம். வாருங்கள் புனித தீர்த்தமாட வினையறுத்து வீடு செல்லுங்கள். இன்பம் பொங்கி வாழ்வு செழித்திடவும்.

# அம்மாவின் புகழ்

நான்கு புறங்களில் கடல் அன்னை இந்து சமுத்திரத்தின் முத்தென தத்துப் பிள்ளையாய் எங்கள் இலங்கை தேசமதனை ஈன்றெடுத்து காத்து வருகின்றாள் எம் இயற்கை அன்னை. இங்கு தொன்று தொட்டு மென்மை வளர்ந்து மேன்மை ஓங்கி தமிழ் பண்பாட்டினை பறைசாற்றி நிற்கின்ற வேளை தன்னில் கடல் அன்னை மறுபுறம் தினமொறு இசையினை மீட்டி நிற்கும் அலைகளால். எத்திசைப் பார்கிலும் பச்சை கம்பளம் விரித்தாற் போல் வயல் வெளிகள் அங்கே தீனி தேடி திரியும் நாரைக் கூட்டங்களும், கொக்கு கூட்டங்களும் மறுபுறம் சந்தோஷ காணத்தைப் பாடி நிற்கும், வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லி நிற்கும் வாழைக் கன்றுகள், மண்ணெல்லாம் வெங்காயம் விளைந்திருக்க, மனமெல்லாம் சிவநேயம் செழித்திருக்க ஓங்கி வளர்ந்திருக்கும் தென்னை மரங்களும், பனைமரங்களும் அங்கு வாழும் மக்களின் மனங்களையும் பறைச்சாற்றி நிற்கும், புண்ணியமும், கண்ணியமும் தினமொறு மலராய் மலர்ந்து புது மணம் வீசி ஆண்டு தோறும் வசந்தமாய் வாழ்த்திசைப் பாடிநிற்கும்.

வேரூண்டி ஸ்தாபித்திருக்கும் சிவதலங்கள் மனமெல்லாம் பக்தியின் துடிப்பினை உணர வைத்திடும் இப்படிப்பட்ட ஒரு புண்ணிய பூமியாய் திகழ்கின்ற ஈழத்திருநாடான யாழ்நல்லூரில் தொலைவில் சிறுப்பிட்டி வல்லை புலம் என்றொரு கிராமம் இங்கு குடிக்கொண்டு வரம் நல்கி அருள்பாலித்து நிற்கின்றாள் "அருள்மிகு கருணா கடாக்ஷி (மனோன்மணி) " அம்மன் இவள் புகழ் பாடிட நாவினிக்கும், அவள் புகழ் மனமுருகி உயிருகி கேட்டிட உள்ளம் மட்டுமல்ல உடல் தன்னில் ஓடுகின்ற செங்குருதிக் கூட இன்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும். அவள் கருணைக்கு எல்லை காட்டிட முடியாது.

கருணை சிந்தும் தெய்வமாய், அருள் தந்து அரவணைத்து அருள் தந்து வாழ்வினை செழிமை பொங்கச் செய்திடுவாள். சிறுப்பிட்டி வல்லைபுலத்தில் குடிக்கொண்டு வரம் சுரந்து அருள் பாலித்து நிற்கின்றாள். நாடி வருவோருக்கு

மட்டுமல்ல அவள் புகழ் செவிக் கேட்டு அம்மன் சன்னதியை நாடி வருவோருக்கும் ஓடிப்போகும் துன்பமெல்லாம். ஈழத்தில் பல சிவதலங்கள் நம்மண்ணின் புகழினையும் வரலாற்றினை பறைசாற்றி நிற்கின்ற வேளை தன்னில் இன்று சிறுப்பிட்டி வல்லைபுலத்தில் அசையாத திருவுருவமாய், சுடர் மங்காத சுடர் சோதியாய் அமர்ந்து விட்டாள் எங்கள் அருள் அன்னை "கருணா கடாக்ஷி மனோன்மணி அம்மன் புராண இதிகாச வரலாறு ஒன்று கூறி மொழிகின்றது. அப்புராணம் பின்வருமாறு அம்மனின் புகழ் அறிந்து அந்த அவதார புருஷன் ஏகபத்தினி விரதன் அந்த ராமபிரானே வழிபட்டு அம்பெய்தி நீர் பெற்று எடுத்தறிந்து கிழுவை மரத்தடியில் களைப்பாறி சென்றார் என்பதனை பறை சாற்றி நிற்கின்றது வரலாறு. கர்ணப்பரம்பரை பாதம் பட்ட இடமெல்லாம் பொன்னாய் மாறும் அப்படிப்பட்ட ராமபிரான் அம்பெய்த ஊற்றெடுத்த நீர் இன்று பக்தர்களின் தீவினைப் போக்கி நல்வினைப் பயற்கும் புனித கங்கைத் தீர்தமாய் பாவம் தீர்த்து நிற்கின்றது. ராமபிரானின் பாதச் சுவடுகளை பின் தொடர்ந்தால் தெளிவுபடும் ஆலயத்தின் மேன்மையும் புனிதமும் நிறைந்த ஆலயமாக விளங்குகிறது.

## வரலாறு

உலகில் எமது ஆலயம் எப்போது தோன்றியது என்பது காலம் கூறமுடியாத அளவுக்கு பழமையான இவ்வலாயம். ஆசியாக் கண்டத்தில் சின்னஞ்சிறு தீவாய் நான்குபுறமும் கடல் அன்னை நீங்கா இசையாய் இசைமீட்டி நிற்கும் ஓரிடமாய் திகழ்வது எங்கள் இலங்கைத் திருநாடாம் எங்கள் இலங்கை. இந்நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சைவத்தின் மேன்மை ஓங்க பல ஆலயங்கள் உருவாக்கப்பட்டு சைவத்தின் மேன்மையையும், சைவத்தின் கலாச்சார பண்பாட்டினையும் பறைசாற்றி நிற்கின்ற எங்கள் தேசமாம் இலங்கை. பச்சைக்கம்பளங்கள் விரித்தாற் போல் எங்கு காணிலும் பச்சை நிறங்கள் பசுமைப்பாடி வரவேற்கும், மண்ணெல்லாம் விதவிதமாய் பூத்து நிற்கின்ற பூஞ்சோலைகள் வசந்தங்களைச் சொல்லி நிற்கும். மக்கள் உள்ளமெல்லாம் செழிப்பு நிலைத்திருக்கும் ஊரெல்லாம் சிவநேயம் நிறைந்து வழிந்தோடும், கண்ணியமும் புண்ணியமும் தினமொரு காவியமாய் உருவெடுத்து நிற்கும் எங்கள் ஈழம் தேசமாம் யாழ்நகரின் "சிறுப்பிட்டி வல்லைப்புலம்" எனும் சிறு கிராமத்தில் குடிக்கொண்டு அருள் நல்கின்றாள்.

எங்கள் "ஸ்ரீ கருணா கடாக்ஷி" அம்மன் கருணையில் அன்னை கருமாரியாய், அருள் நல்குவதில் அம்பிகையாய், குறைத்தீர்த்து நிறைதந்து அருளும் நல்லுள்ளம் கொண்ட நகுலேஸ்வரியாய் கருணை சிந்தும் அருள் தேவியாய் அமர்ந்து அருள்பாலித்து அமர்ந்து கொண்டிருக்கின்றாள் எங்கள் அருள் கொஞ்சும் அழகு அம்மன் "ஸ்ரீ கருணா கடாக்ஷி" அம்மன்.

சிறுப்பிட்டி வல்லைபுலம் குடிக்கொண்டு அருள் நல்கும் அம்மன் புகழ், அருள் அறிந்தானோ அந்த அவதாரப் புருஷன் ஏகப்பத்தினி விரதன் அந்த ராமபிரானே -ஸ்ரீ கருணா கடாக்ஷி அம்மனை வணங்கி அம்பெய்ந்தி நீர் பெற்று எடுத்தறிந்து கிழுவை மரத்தடியில் இளைப்பாறி சென்றான் என்பதனை பறைசாற்றி நிற்கின்றது புராணம். கர்ணப்பரம்பரை பாதம்பட்ட இடமெல்லாம் மாறிடும் பொன்னாய் விளங்கும் அப்படிப்பட்ட ராமன் வந்து வணங்கிச் சென்றதனால் ஸ்ரீ கருணா கடாக்ஷி அம்மன் பெறுமையும், அருளையும் பறைசாற்றி நிற்பதனை எண்ணும் உள்ளமெல்லாம் பக்தி வெள்ளம் தான். மூவுலக ஆள்பவளும், முக்கனிபோல் இனிப்பவளும், முத்தமிழாய் துதிப்பவளும் அருள் நாயகி அன்னை ஆதிபராசக்தியின் அருளுக்கு ஈடுயில்லையம்மா எழுத்தினால் கூறிவிட மேலும் இந்நூலின் அடுத்த அடுத்தப் பக்கங்களை வாசிக்கும் போது தெளிவுபடும் ஆலயத்தின் மேன்மை.

மேலும் ஆலயத்தின் சிலைகளும், ஆலயக்கட்டடங்களும், ஆலயத்தின் வீற்றிருந்து அருள்பாலிக்கும் தெய்வமும் (ஸ்ரீ கருணா கடாக்ஷி) சொல்லி வரவேற்கின்றது. பக்தர்கள் எம்மை ஆலயத்தின் மகிமையினைச் சொல்லி இதனையல்லாது ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து அருளையும், ஆசியையும். ஆலயத்தின் சிறப்பினையும் நேரகக் கண்டு வணங்கிச் செல்லும் பக்தர்கள் அறிவார்கள் ஆலய மகிமையினை.

அன்பு சாரளினை தூவி எங்கள்
பக்தர்களின் நெஞ்சமெல்லாம்
பக்தியெனும் மலர்களைப் பூக்கச்
செய்யும் அருள் மாரி எங்கள்
கருணா கடாக்ஷி புகழ் நாட்டில்
மட்டுமல்ல கடல் தாண்டி கூட
புகழ் மணம் வீசி நிற்கும்!!
ஸ்ரீ கருணா கடாக்ஷி அம்பாளே
போற்றி!!

**அருள் பாலிக்கும் அம்மனின் மகிமை**

துன்பமென்று உன்னை நாடி
வந்தோம் அம்மா...!!
குறைத் தீர்த்து அருள் நல்குவாய்
என்று நம்பி வந்தோம் அம்மா...!!
உன்னருள் பெற்று வீடு திரும்பயிலே
இல்லமெல்லாம் இன்பம் செல்வம்
பொழிந்து வரவேற்றிடும் அம்மா..!!
நெஞ்சமெல்லாம் இன்ப வெள்ளம்
பாய்ந்து வாழ்வு செழித்து நிற்கும்...!!

**அம்பிக்கையே ...!!**

காவலுக்கு காளியாய் அன்பு சொரிந்து அரவணைத்து கொள்வதில் அம்மனாய் எண்குணங்களைக் பொருந்திய ஐஸ்வர்ய கடாட்சமாய் அம்மன் அமர்ந்து பக்தர் அனைவருக்கும் அருள் பாலித்து நல்லருள் பாலிக்கும் அம்பிகையே உன்னை எங்கணம் வர்ணிப்பது என்று நான் திளைக்கின்றேன் ஒரு கணம் துன்பமென்று நாடி வரும் பக்தர்கள் முகம் மனம் நெகிழ வைக்கும் உன் பெறுமை யாருக்குண்டு தாயே!! குறையென்று வாய்திறந்து மன்றாட மனம் நல்கி அகமெல்லாம் மல்லிகை மணம் தான் அம்மன் அருள் பார்வைப்பட்டால் சஞ்சலங்கள் தீர்த்து சந்தாஷமதனை வாழ்வின் எல்லை கொண்டு செல்வாய் நீ தாயே! இன்னல்கள் யாவும் மின்னி மறைகின்ற மின்னலாய் மாய்ந்து மாயமாய் போய்விடும் உன் சன்னதியை நாடி வரும் பக்தர்களுக்கு தீமைகள் அகன்று நன்மைகள் ஓங்க உன் அருள்பார்வை கிட்டினால் போதும்

ஓம் ஓங்கார தேவியே
உன் பாதம் சரணடைந்தோம்
நின்பாதம் என் சிரம் தாழ்த்தி
வணங்கிட உன் பாதம்
தன்னில் தூசாகும் அனைத்தும்
எண்ணிய எண்ணமெல்லாம்
இனிதே நிறைவேற்றிடுவாய்
கற்பூரம் கொழுத்தி கவலைகள்
தீர்த்திட வேண்டிடுவோம்
தீயினில் எரிந்திடும் சுடரில்
எரிந்து விடும் துன்பங்களும்
தொல்லைகளும்!!
அம்பிகையே..!! காவல் நிற்கும்
காவல் நாயகியாய்
சிறுப்பிட்டி வல்லைபுலத்தில்

அசைக்க முடியாத திரி சூலமாய்
நிலம் ஊண்டி விட்டாயோ நீயம்மா..!!
பக்தர்கள் நாம் அனைவரும்
உன் குழந்தைகளாய் பாசமாய்
அரவணைத்துக் கொள்கின்றாய்
தாயே...!! ஒரு அன்னையாய்
தளராத தீச்சுடராய் நீயம்மா..!!
உன் அருள் வேண்டி கைகூப்பி
வணங்கி நிற்க வேண்டியதில்லை
மனமுருகி நொடி நேரம்
நிந்தித்தாலே போதும்
அம்பிக்கையே!! உன் பாதம் போற்றி
துதிக்கின்ற கைகளிலோ வெற்றி திலகம்!!
துய்யதோர் மனத்தினுள்ளே பூக்கும் கமலம்!!
விதிக்கின்ற செயலனைத்தும் உன்னில் உதயம்!!
விளையாட்டாய் வினைத்தீர்த்தருளும் தாயின் இதயம்
சீர்மிகு சிறுட்டி "கருணா கடாக்ஷி" பேர்புகழாய்!!
என்றும் எமை காத்து நிற்பாள்!!
முகத்தில் கொஞ்சி விளையாடும் குழந்தையழகுடன்
புலமே பெயரினும் இனமே பிரியினும்!!
தாய் நீயின்றி துணையுமில்லை எமக்கு
உன்னையன்றி உன் அன்புயின்றி அருள்
ஏதும் இல்லை எமக்கு!! நலமே பெருகி ட
வளமே விளைந்திட தாய் நின்னருளை
தேடும் பிள்ளைகள் நாமாவோம்!!
ஸ்ரீ கருணா கடாக்ஷி வாழும் சிறுப்பிட்டி
வல்லைப்புலத்தில் குறையென்றும் கூற
ஏதும் இல்லை!! அம்மா குறையென்றும் இல்லை!!
கனவிலும் நினைவிலும் மறப்பதில்லை
கண்ணின் இமையாக காவல் நீ நிற்கின்றாய்
எம்மோர் எப்போதும் அழிவதில்லை...!!

அளவற்றுப்புகழ்ந்து கூற வார்த்தைகள் கோடி முந்திக் கொண்டு வருகின்றன அம்மா உன் புகழ்பாடவும் கூறவும் அருள் தீர்த்து அரவணைத்துக் கொள்ளும் அன்பு தாயானவள் எங்கள் கருணா கடாக்ஷி அம்மனின் திரு ஆலயம்.

**தீர்த்தத்தின் மகிமை!!**

சிறுப்பிட்டி வல்லயபுலம் கிராமம் தன்னில் வீற்றிருந்து அருள் மாரியை மும்மாரியாய் பொழிந்து எம்மைக் காப்பவள் அன்னை "கருணா கடாக்ஷி" இவள் மகிமையினை அன்னைப் படைத்திட்ட ஒரு நாவால் பாடிவிடவோ சொல்லி விடவோ முடியாது என்று திகைத்து நிற்கும் போது ஆலயத்தின் தீர்த்த மகிமையினைப்பாட முந்திக் கொண்டு வந்து நிற்கின்றன சொற்கள் என்னில்...!!

மண்ணின் ஆடைப்போலே பூமி தன்னில்
 ஓடும் வெள்ளங்கள் (நதிகள்)
இயற்கையிலே அசுத்தங்களை அகற்றி
 விரட்டும் வல்லமையுண்டு!!
இராமேச்சரம் ஒரு முறை சென்று புனித
 காசி நீரிலே பாவத்தின் வினையகற்ற
ஒருமுறை முங்கி எழுந்திட்டால்
 தீரும் முன்வினை பாவத் தொடர்கள்!!
அப்படியொரு வினைத்தீர்க்கும் புனிதம்
 நர்மதைநதிக்கு!! இந்நீர் துளி
சிறு துளியாய் பாவிகள் எம் மேனிகளில்
 பட்டால் போதுமே என்று
ஏங்கித் தவிக்கின்றனர் நர்மதைப் புனிதம்
 அறிந்தவர்!! அசைந்தாடும் அலைகள் கூட
துள்ளி குதித்து அழைத்திடும் பாவவினையறுத்து
 அருள் நல்கிட!! நர்மதை நதியில் வெண்
நுரையாய் பொங்கிடும் நீர் குமிழ்கள் கூட
 கங்கையின் புனிதத்தைப் பறைசாற்றி நிற்கும்!!

ராமபிரான் அம்மனை வழிப்பட வந்தபோது அம்பெந்தி நீர் பெற்ற ஊற்றே இன்று கருணா கடாக்ஷி அம்மன் ஆலயத்தின் பாவ வினையறுத்து பக்த அடியார்களுக்கு வாழ்வின் புனிதத்தினை தொடங்கச் செய்கின்றது.

முப்பத்து முக்கோடி தேவர்களும்
ஜெயிக்கின்ற போதெல்லாம்
ராமா என்ற நாமமே..!!
அருமந்திரமாய் இருந்து
வந்திட விண்ணெய்திய
உடலுக்கெல்லாம் காதில்
ஓதும் மந்திரமாய் காவலனாக
சிவனே ஓதிட முக்தி
அடைந்திடுவார் என்பது ஓர் ஐதிகமாம்..!!
கங்கையின் புனிதம் மேல் ஓங்க
கங்கைக் கரையின் கல்லில்
காசி விஸ்வநாதர் சிலை உருவமாம்
விஸ்வம் என்றால் அகிலமாம்
உலகத்தின் நாதனாம் காசி
விஸ்வநாதன்
கருணா கடாக்ஷி அம்மனின்
புனித தீர்த்தமாய்
மாறி ததும்பி நிற்கின்றது
தள்ளாடும் அலைகள் வந்து
நீராடி உங்கள்
பாவங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்
என அழைப்பதாய்
வரவேற்று நிற்கும்.

சைவம் போற்றும் சிவதலங்களில் ஆலயத் தீர்த்தம் என்பது முக்கியமான ஒரு விடயம். அது போல சிறுப்பிட்டி வல்லைபுரம் கருணா கடாக்ஷி ஆலயத்தில் அமைவது சக்தி சிவமும் இணைந்த பூரண பெருங்கருணை பெற்றுத் தரும் என்பதுஎதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் அற்புதங்கள் பறைசாற்றி நிற்கும் என்பது திண்ணம்.

## தீர்த்தத்தின் மகிமை.

கங்கை தீர்த்தத்தில் காசி விஸ்வநாதன் கரையில் அருள்பாலித்து நிற்கின்றார். பக்த அடியார்களின் பாவவினையறுத்து நல்வினைப் பயக்கும் முகமாக புனித கங்கையில் தீர்த்தமாடி அன்னையின் நினைவினை மனதில் ஊண்டி அவள் புகழோடு அன்னையின் சன்னதி அமைத்திட கிடைக்காத வரம்கூட கைகூடி வாழ்வெங்கும் ஒளி மங்களம் திகழும்.

தீராத கோடிப் பிணிகளும்
தீர்ந்து கரைந்து விடும்
புனித தீர்த்த கங்கையிலே
முற்பிறப்பினிலே எதுவாகப்
பிறந்து எத்தனை
தீமைகளும், பாவங்களும்
விளைந்திருப்போம் என்று
நாம் யாரும் அறிய மாட்டோம்
ஆனாலும் முற் ஜென்ம
பலன்களே இந்த ஜென்ம எம்
விதியாக மாறிவிட்ட உண்மை
எம்மில் சிலருக்குத் தான் தெரியும்
சிலர் சிவத்தல யாத்திரைகள்
சிலர் சிவத்தலத் தொண்டுகள்
என தம் வாழ்க்கைப் பயணத்தை
தொடர்வார்கள்..!! ஆனால்
இவையெல்லாம் காட்டிலும்
எம் அன்னை அருள் மிகு
கருணா கடாக்ஷி மனோன்மணி
ஆலயத் தீர்த்தம்
போக்கிவிடுமே சகல பாவவினைகளையுமே
மெய்யன்போடு தீர்த்தமிறங்கி
நீராடி அம்மனை தரிசனம் கொள்
பிறகு உன் வாழ்வில்
தொடங்கும் வெற்றிகளும், இன்பங்களும்
செல்வ செழிப்புக்களும்
அளவில்லையே உன் வாழ்வில்

**தெய்வங்களும் அமைப்புகளும்**

புதிதாக பிரதிஷ்டை செய்து கோள்களின் பிடியில் இருந்து மக்களை காவல் காத்திட ஆலய நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று ஔவை கிழவி மொழிந்துள்ளார், மேலும் கோவில் இல்லா ஊர் எப்படி இருக்கும் என்றால்

"திருக்கோவில் இல்லா திருவிற்றூரும்" என்று அருளிய தேவாரப் பதிகம் நன்குரைக்கும்

**ஆலய மகிமையினை**

இதனால் அன்றோ சான்றோர்களும் எம்முன்னோர்களும் அதன் வழியில் ஆகமங்களில் விதிப்படி பன்னிரெண்டு ஆண்டுக்கொருமுறை "கும்பாபிஷேகம்" நடைபெறுகின்றது. இந்தப் பெரும் வைபோக விழா எதிர்வரும் 31.08.2014 ஆங்கில திகதிக்கு இணையான ஜய வருடம் ஆவணி மாதம் பதினைந்தாம் திகதி சஷ்டி திதி சுவாதி நட்சத்திரம் துலா ராசி 9.30 11 துலா லக்கினத்தில் சித்தயோகி சுபதினத்தில் நடைபெற இருக்கின்றது. இதற்கு முன் ஆலயத்தின் முற்பார்வைக்கு கொஞ்சத்தை திரும்பி பார்ப்போம்.

**ஆலய முற்பார்வை.**

அலங்கார நாயகியாய் அழகுக் கொஞ்சும் முகத்துடன் அன்பினால் எம்மைக்காத்து வந்த சிறுப்பிட்டி வல்லை புலத்து அம்மனை எங்கள் மருவத்தூர் நாயகி அம்பாளை அருளாட்சி செய்தவளை தயோரால் தீயிட்டுப் புடம் போடப்பட்டு ஆலயத்தின் பல நாச வேலைகளை நிலை நாட்டிச் சென்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு ஜொலிக்கும் தங்கமாய் மின்னிடும் வைரமாய், மீண்டும் ஒரு புதுப் பொலிவுடன் திருக்காட்சி தந்தருள பாரதத்திலிருந்து ருத்ர பூமியாம் ருத்திரனின் திரிசூலம் தாங்கி நிற்கும் வைரவ பூமியாம் காசியிலிருந்து விஸ்வ நாதர் கருணா கடாக்ஷியை காண இங்கே எழுந்தருள இருக்கின்றாள்.

“அல்லல்போம் வல்வினைப் போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைப்போம்
போகாத்துயரம் போம் - நல்ல
குணம் அதிகமாம் கருணை
கோபுரமதில் வீற்றிருக்கும் கணபதியை
கைதொழுதால்
தும்பிக்கையுடையான் எங்கள் முதல்
வணக்கத்துக்குரியவனாம்
வினைகள் தீர்த்து விளையாடும்
பாலகனாம் எங்கள்
கணபதி சிலை முதல் வணக்கச் சன்னதி
அதனையடுத்து
விண்ணையும் மண்ணையும் அளந்து
நிற்கும் பெரும் உருவமாம்
பெருமானை வணங்குதற் பொருட்டு
சிதேவி பூதேவி வீற்றிருக்க
சமேத விஷ்ணுவின் சன்னதி
சங்கநிதி பதுமநிதியை வாரி
வழங்கும் வண்ணம் அழகுடன்
அருள் பாலிக்கின்றார்
அதனையடுத்து
ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
என்று மறைகள்
போற்றி துதிப்பாடும் தண்டபாணி வீற்றிருக்க
அழகு என்று நினைக்க உள்ளமெல்லாம்
அவன் உருவம் எங்கள்
முத்துக் குமரன் தான் வேறு இல்லை
பக்தர் கோடிகள் வெற்றி வேல்
வீரவேல் மனம் நெகிழ்ந்து
அழைத்திட பகைவிரட்டும் சக்திவேல்
எங்கள் வீரவேல் சன்னதி
இப்படி கோயில் இலட்சனைகள்
பொருந்திய வண்ணமிருக்க
கருவறையில் அம்மன் வீற்றிருந்து
அருள்பாலிக்கின்றார் வரும் பக்தர்களுக்கு

## சிவலிங்கம் மூர்த்தியின் மகிமை

தன் இடத்தின் முழுதாய் அர்ப்பணித்து நின்ற எம்பெருமான் ஏழுமலையான் சிவபெருமான் தன் துணையாள் தனியாய் தனித்திருந்து யாழ்ப்பாண சிறுப்பிட்டி வல்லயபுலத்தில் ஸ்ரீ கருணா கடாக்ஷி" அம்மனுக்குத் துணையாய் எழுந்தருள உள்ளார். அந்த சிவலிங்க மூர்த்தியின் பெருமை பின்வருமாறு

காசி புனித தீர்த்தமானது ஒரு துளி
மேனி மீதுபடவே பாவங்கள்
அனைத்தும் கரைந்துச் செல்லுமே
நதியோடு!!
அத்தகைய புனிதம் பொருந்திய
நர்மதை நதியில் !!
தவசிகள் கடும் தவம்
48 நாட்கள் விரதம் பூண்டு
வேண்டி நின்றால் ஒரு
சிவலிங்கம் உருண்டு வருமாம்
அலைமீது!! அந்த சிவலிங்கம்
இதற்காக கவிகளில்
காசியில் வந்தவனே நர்மதை
நதியில் உருண்டோடி வந்தவனே
எனப் பல பாடல்களும், கவிதைகளும்
வர்ணிக்கப்பட்டுள்ளது.
அப்படியொரு தெய்வீகம் மற்றுமல்ல
அருளும் தெய்வீகச் சக்தியும்
பொருந்திய லிங்கத்தின் பிரதி விம்பம்
சிறுப்பிட்டி வல்லயபுலம்
கோயிலில் எழுந்தருளி பக்தர்களின்
குறைதீர்த்து அருள் நல்கவுள்ளார்.

## நவக்கிரகத்தின் நோக்கம்

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என பன்னிரண்டு இராசிகளும், அசுபதி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிசை, புனர்பூசனம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரத்தாடி, ரேவதி எனும் 27 நட்சத்திரங்களை ஆளும் அதிபதியாய் நவக்கிரக் கோள்கள் புதிதாய் ஆலய பரிபாலசபை மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

## ஆலயப் பரிகாரங்கள்

இக்கோயிலில் மூர்த்தி தலம் தீர்த்தம் என்பன மற்றும் சிறப்பம்சமாக அமைந்தாலும் இன்னொரு அம்சமாக திகழ்பவை பரிகாரங்கள் தடைகள் செய்வினை ஏவல் பில்லி சூனியம் நீங்கப் பூசணிக்காயை பிளந்து அதில் நல்லெண்ணை, வேண்பெண்ணை, இலுப்பெண்ணை என்ற முக்கூட்டு எண்ணெய் ஊற்றி தீபமேற்ற தீவினையகன்று நல்வினை ஓங்கும். தேங்காயை சரிபாதியாக உடைத்து அதில் இலுப்பெண்ணை ஊற்றி தீபமிட சகல வினைகளும் தீர்ந்தருளும் மேலும்

## (1) ஓம் சுவானத்வஜாய வித்மஹே

என்ற மந்திரத்தை மனதார மனதில் நிலைநாட்ட எத்திசையிலும் வெற்றி கிடைக்கும். மேலும் துர்க்க நிவாரணியாக காட்சியளிக்கின்றாள். செவ்வாய் வெள்ளி ராகு காலத்தில் எலுமிச்சை கனி மாலையணிவித்து செம்மலர் மாலையணிவித்து நெய்தீபம் ஏற்றி போற்றி வணங்கிட தோஷம் நீங்கி மாங்கல்ய பலமுண்டாகும்.

பிள்ளையார், கிருஷ்ணன், முருகன், துர்க்கை, காத்தவரயான், வைரவர், சண்டேஸ்வரர், நந்தி தேவரின் சிலையும், பலிபீடமும், பிரதிஷ்டை செய்யப்பட்டது. நவக்கிரகச் சுவாமிகளுக்கு புதிய நூதன ஆலயங்களும் நூதன விக்கிரகங்களும் பிரதிஷ்டை பண்ணப்பட்டது.

## ஆலயத்தின் சேவை நல்குணர்கள்

ஆலயத்தில் பல தெய்வங்கள் எழுந்தருளி அருள்பாலித்து பக்தர்களுக்கு நல்லாசி வழங்கி நின்றாலும், ஆலயம் நல்லாசியுடன் ஆலயநெறிகளுடன் விளங்கி நிற்கவும் ஆலய தர்மகர்த்தாக்கள் முன்னின்று ஆலய மேன்மைக்காய் தொண்டினையும் சேவையினையும் தன் உடல் ஓடும் உயிராய் நினைந்து தங்கள் சேவையினைத் தொடர்ந்தனர்.

மணியக்காரன் பரம்பரையாம் வைசீகராய் இம்
மண்ணில் உதித்தனர்
கனகசபை வேலுப்பிள்ளை அவர் முன்னோரும்
வேலுப்பிள்ளையும் அவர்கள் முன்னோர்களும் அவர்களின்
பின்னால் ஸ்ரீமான் வேலுப்பிள்ளை கனகசபையும் தொடர்ந்து
வேலுப்பிள்ளை கந்தையாவும்
அம்மாவின் சிவத்தொண்டு சேவைக்காய்
மண்ணில் பிறந்திட்டார்கள் !!
1988 ஆம் ஆண்டு தன்னில் ஆலய
பரிபாலன சபை உருவெடுத்து
மலர்ச்சிக் கண்டது!! பொது மக்கள்
ஒன்று கூடி கரம் கோர்த்து
நல்லுதவியுடன் 1991 ஆம் ஆண்டு தன்னில் மகா கும்பாபிஷேகம்
நடைபெற்றது பன்னிரெண்டு ஆண்டுக்கொரு
முறை நடைபெறுகின்ற "மகா கும்பாபிஷேகம்"

பக்தர்கள் கோடி!! அம்மனின்
ஆசியும் கோடி" இதைத் தொடர்ந்து
2011 ஆம் ஆண்டு பொது மக்கள்

மீண்டும் முன்னின்று புனருத்தாரணம் பண்ணி மகாகும்பாபிஷேகம் நடைபெற்று அகமகிழ்ந்து அம்மனின் அருள்கடாட்சத்தை பெற்றனர்.!!

23.05.2014 அனர்த்தம் அதாவது திருடர்களின் நாசச் செயலினால் நடைபெற்ற அனர்த்தம் காரணமாக ஆலயத்தில் மூலவிக்கிரகம் தீ மூட்டப்பட்டு நாசமாக்கப்பட்டது. மூல விக்கிரக்கிரகமும் மீண்டும், சிம்மமும், பலிபிடமும் புதிதாய் வடிவமைத்து புதுப்பித்து இருக்கின்றார்கள் அவர்கள் பின்வருமாறு

அதே வம்சம் அதே தர்மகர்த்தா
பரம்பரையில் இருந்து வந்த
வேலுப்பிள்ளை கனகசபையின்
அருமை புதல்வியாய் மண்ணுக்கு வந்த
கனகராசா ருக்மணி தேவியும்
வேலுப்பிள்ளை சின்னத்தம்பியின்
புதல்வன் இம் நற்திருப்பணியைச் செய்தனர்.
பெயர் சொல்லப் பிறப்பான் பிள்ளை இவன் தன்
பரம்பரையின் பெயரை நிலைநாட்டப்
பிறந்தவனாம் இம்மண்ணில் (ஷண்முகலிங்கம்)
கடல் தாண்டி நாடு தாண்டி
நாடு நீங்கி நாடு சென்றாலும்
மறந்திடவில்லை தன் மண்ணில்
அம்மன் கோவிலுக்கு இளைத்த கொடுமையை
சிறுப்பிட்டி வல்லைப்புலத்தின் சீர்குழைந்து
கிடந்த அம்மன் கோயிலின்
நிலையைக்காணவோ..!! என்னவோ இவருக்கு
கண்ணைத் தந்தான் இறைவன்.

மக்கள் சேவையே மகேஷன் சேவையென
நினைத்தானோ என்னவோ!!
சீர்குலைந்த மூல விக்கிரகத்தை சீர்தூக்கி
நிலைநாட்ட ஆலய விக்கிரகத்தினை
புதிதாய் பிரதிஷ்டை செய்து
மூலமூர்த்தி தெய்வமாய் கருணாகடாக்ஷி
அம்மனை திருவுருவச் சிலையாய்
அம்மன் சிலைக்குரிய சிவப் பணிவழங்கி
நிற்கின்றான் இம்மகன்.

தேவஸ்தானத்தில் காசிவிஸ்வநாதரையும் நந்திபலிபீடத்தையும் பிரதிஸ்டை செய்வதற்கு திருத்தொண்டாற்றியவர்கள்.

நர்மதா நதியில் அவதரித்த காசி விஸ்வநாதப் பெருமானை சின்னத்தம்பி ஷண்முகலிங்கம் காசியில் இருந்து பக்தி சிரத்தையுடன் எடுத்துவர தர்மகர்த்தா குடும்பத்தில் இருந்து வேலுப்பிள்ளை கனகசபையின் புதல்வி தவஞானம் ஞானசவுந்தலாவும் கந்தையா தம்பிராசாவின் புதல்வி அமரர்களான இரத்தினசிங்கம் கடம்பவனநாயகி ஆக அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் 4 பிள்ளைகளும் திருத்தொண்டாற்றியுள்ளனர்.

தேவஸ்தானத்தில் அம்பாள் சந்திரசேகர ரூபமாக காட்சி கொடுப்பதற்காக தாமரை நூதன விக்கிரக சிலைக்காக கந்தையா தம்பிராசிவின் புதல்வி சடாச்சரம் இராஜேஸ்வரியும் தம்பு குத்திதம்பின் புதல்வி சகிலன் இதயாயும் திருத் தொண்டாற்றினர்.

தேவஸ்தானத்தில் நூதன நவக்கிரக திருவுருவச் சிலைகளும் நூதன அற்புதமான ஆலயமும்

அமைப்பதற்கான பணியை தாமோதரம் பிள்ளை முத்துக்குமாரவின் புதல்வன் இலட்சுமிநாதனின் குடும்பத்தினரும் தாமோதரம்பிள்ளை முத்துக்குமரனின் புதல்வன் இலங்கைநாதன் குடும்பத்தினரும் தாமோதரம்பிள்ளை முத்துக் குமாருவின் புதல்வன் இராமநாதன் குடும்பத்தினரும் தாமோதரம்பிள்ளை

முத்துக் குமாருவின் புதல்வி சற்குணம் புஸ்பவதியின் பிள்ளைகளும் தாமோதரம்பிள்ளை முத்துக்குமாருவின் புதல்வி திலகராஜா நாகேஸ்வரியும் கந்தையா சரவண முத்துவின் புதல்வி பொன்வாசன் கோமதியும் நாகமுத்து கந்தையாவின் புதல்வன் ஸ்ரீகந்தராஜா குடும்பத்தினரும் திருப்பணியாற்றி இந்த நவக்கிரக சுவாமிகளின் நூதன ஆலயத்தையும் விக்கிரகத்தையும் அற்புதமாக அமைத்து தந்து பெருந்திருப்பணியை ஆற்றியுள்ளனர்.

**ஆலயகுருமார்களும் விடுதியும்**

தேவஸ்தான தெற்கு வீதியில் தொன்று தொட்டு அமைந்து இருந்த இல்லத்தில் இருந்து சோமஸ்கந்த குருக்கள் தொண்டாற்ற அதனைத் தொடர்ந்து சிவஸ்ரீ குருமூர்த்திக் குருக்கள் சேவையைத் தொடர்ந்து காமாட்சி சுந்தரேசக் குருக்கள் பணியாற்றிய காலத்தில் தவிர்க்க முடியாத காரணத்தால் ஆலயத்தில் இருந்து விலகி உலகின் பல நாடுகளில் சிவத் தொண்டாற்றி வந்தார்.

நாம் செய்த புண்ணியமோ என்னவோ 45 வருட இடைவெளிக்குப் பிறகு எமது தேவஸ்தானத்தில் 29.08.2014 இல் நடைபெற்ற கிரிஜைகள் தொடக்கம் 31.08.2014 திகதி அன்று வரை நடைபெற்ற மகாகும்பாபிஷேகம் வரை சர்வபோககா ஆசிரியராக பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த இடைக்காலத்தில் பலகுருமார்கள் இவ்வாலயத்தில் தொண்டாற்றி உள்ளனர். ஆலயத்தின் தெற்கு வீதியில் உள்ள குருமாரின் இல்லம் 2011ம் ஆண்டு தேவஸ்தான புனருத்தாரனத்துடன் புதிதாக திருத்தி அமைக்கப்பட்டு இருந்தது. மீண்டும் 14.07.2014 திகதி தொடக்கம் குருமூர்த்திக்குருக்களின் பரம்பரையில் வந்த கெ.முகுந்தசர்மா அவர்கள் ஆலயத்தின் தெற்கு வீதியில் உள்ள ஆலய இல்லத்தில் இருந்து தொண்டாற்றி வருகின்றார்.

## பிரதோஷ வழிபாடு

பிரதோஷ மகிமை : இறைவனின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பலவகையான பூஜைகள் நடத்தப்பெறுகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பாக கருதப்படுவது பிரதோஷ நாள் வழிபாடாகும். உணவை எப்பொழுது உண்டாலும் பயனுண்டு. ஆனால், அதற்கென்று குறிப்பிட்டுள்ள நேரத்தில் உண்கின்ற போதுதான் முழுப்பயனையும் அடைய முடியும். அதுபோல இறைவனை எப்பொழுது பூஜித்தாலும் பலன் உண்டு என்றாலும், சில குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் பூஜித்தால் முழுப்பலனை அடையமுடியும் என்பது உண்மையாகும். இது அனுபவத்தால் தெளிவான அறிந்த ஒன்றாகும்.

பலர் பிரதோஷ வழிபாட்டின் மூலம் பலவகைத் தடைகள் விலகப்பெற்ற பெறுவதற்கரிய செல்வங்களைப் பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள். இவ்வுண்மையைப் புராண வரலாறு நமக்கு விளக்குகிறது.

**பிரதோஷ காலம் :** பொதுவாகப் பிரதோஷ காலம் என்றால், பகல் முடியும் நேரம் தொடங்கி இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும் நட்சத்திரங்களும் தோன்றும் நேரம் வரை என்று கூறுவர். இதை மிகவும் துல்லியமாகக் கணக்கிட்டு மாலை 5.45 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் என்று பிரதோஷ காலத்தைச் சாஸ்திர அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்து 13 - ஆம் நாளும், பௌர்ணமியில் இருந்து 13 ஆம் நாளும் திரயோதசி திதியாகும். அன்றுதான் பிரதோஷ நாட்கள் வருகின்றன.

**வழிபடும் முறை :** பிரதோஷ நாளன்று அதிகாலை எழுந்திருத்தல் வேண்டும். காலைக் கடன்களை முடித்து சிறப்பாக இறைவன் நாமாவளிகளைக் கூறி பூசித்தல் வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது.

ஆலயம் சென்று லிங்கமூர்த்திக்கும் அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேகம் ஆராதனை செய்யலாம். எப்போதும் இறைவனையே சிந்தை செய்ய வேண்டும். சிவபுராணத்தைச் சொல்லிக் கொண்டிருத்தல் மிகவும் நல்லது.

சிறப்பாக நேர்த்திக் கடன் செய்ய விரும்புவோர் ஆலயம் சென்று மாலையில் சிவபிரானுக்கும் ரிஷபதேவருக்கும் அபிஷேகம் செய்தல் வேண்டும். ரிஷபதேவருக்கு அறுகம்புல் மாலை அணிவிக்க வேண்டும். மாவினால் அகல் செய்து தூய்மையான பசு நெய்விட்டு விளக்கு எரித்தல் வேண்டும். காரரிசியில் வெல்லம் கலந்து ரிஷபதேவருக்குப் படைத்தல் வேண்டும். ரிஷபதேவரின் கொம்புகளுக்கு இடையே பார்த்து சிவபிரானைத் தரிசித்தல் வேண்டும்.

பிரதோஷ காலத்தில் மட்டும் வழக்கமாக வருவதுபோல் ஆலயப்பிரதட்சணம் வருதல் கூடாது. அப்ரதட்சணம் வருதல் வேண்டும். இதைச் சோமசூத்ரபிரதட்சணம் என்பர்.

ரி - ரிஷபம்
ச - சண்டிகேசுவரர்
கோ - கோமுகை

ரி ச ரி கோ
ரி ச கோ
ரி ச ரி

மேலேயுள்ள குறியெழுத்துக்கள் ஒரு முறைவரும் அப்ரதட்சணத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது இடப தேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டடேசுரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து கோமுகியைக் கடவாது முன் சென்ற வழியே திரும்பி வந்து இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்று திரும்பி,

இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று கோமுகியைச் சேர்ந்து அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரை தரிசித்து இடமாகச் சென்று சண்டேசுரரை தரிசித்து திரும்பிவந்து இடப தேவரை தரிசித்து அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹரஹர என்று சொல்லி சிவபெருமானைத் தரிசித்து வணங்குதல் வேண்டும். இது ஒரு பிரதஷணம் ஆகும். இதுபோல் மூன்று முறை பிரதஷணம் செய்தல் வேண்டும்.

பின்னர் சிவபிரான் உமாதேவியாருடன் ரிஷபாரூடராய் பிரதோஷச நாயகராய் பிரதோஷச காலத்தில் (மணி 5-45 முதல் 6.30 வரை) ஆலயவலம் வரும்பொழுது கண்டு தரிசித்தல் மிகப்பெரிய புண்ணியமாகும்.

வேதபாராயணத்துடன் முதலிலும், திருமுறை பாராயணத்துடன் இரண்டாவதும், நாதசுர மங்கல இசையுடன் மூன்றாவதுமாக மூன்று முறை ஆலயவலம் நடைபெறும். இரண்டாவது வலம் வரும்பொழுது இறைவனையும், இறைவியையும் ஈசான திக்கில் இருந்தருளச் செய்வார்கள். அப்பொழுது காட்டும் கற்பூர ஆரத்தியைக் கண்டு தரிசிப்போர்க்கு மிகுந்த பலனுண்டு அன்னமிட்டு பிறகு தாமும் உண்டு பிரதோஷ விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

சனிப்பிரதோஷத் தரிசனத்தில் தனிச்சிறப்பும் பலனும் உண்டு அதை மகாப்பிரதோஷம் என்பர்.

**பிரதோஷ தரிசனப்பலம் :** - பிரதோஷகாலம் என்றாலே பாவங்களைப் போக்கி நல்ல பலன்களைத் தரும் புண்ணிய காலமாகும். அக்காலத்தில் சந்திர மௌலீசுரரை தரிசிப்பதால் தோஷங்கள் எதுவாக இருந்தாலும் உடனே விலகும். பயவுணர்வு, அச்சம், குழப்பம், தீராப்பிணிகள் மறையும் மனநலம், உடல்நலம், வாக்குநலம் வளம்பெறும் வருகின்ற செய்திகள் எல்லாம் நல்லதாகவே வரும் மங்கலச் செயல்கள் தொடரும். சாதனைகள் புரிய வாய்ப்பும் வல்லமையும் உண்டாகும். கீழே பிரதோஷ தரிசனத்தால் உண்டாகும். பலன்களுக்கு எடுத்துக் காட்டாகச் சாண்டில்ய முனிவர் கூறியிருக்கும் ஒரு வரலாறு கூறப்பட்டிருக்கிறது.

## வரலாறு

முன்னொரு காலத்தில் விதர்ப்பநாட்டில், ஒரு கைக்குழந்தைக்கு தாயாக மிகவும் வறுமை நிலையில் ஓர் அந்தணப்பெண்மணி வாழ்ந்து வந்தாள் சிவபக்தி உடையவள். கணவனை இழந்த அவள் ஒரு நாள் கைக்குழந்தையுடன் காட்டுவழியே சென்று கொண்டிருந்நதாள்.

ஒரு குழந்தை அனாதையாக அழுது கொண்டிருப்பதைக் கண்டு அப்பெண் உள்ளம் உருகினாள். அப்பொழுது வானில் அசரீரி மொழி எழுந்தது. அக்குழந்தை அரசகுமாரன் என்றும், பெயர் தர்மகுப்தன் என்றும், அதைத் தூக்கிச் சென்று வளர்க்கும்படியும் அதனால் அவளுடைய துன்பமெல்லாம் நீங்கும் என்றும் அசரீரி வாக்குக் கூறியது. எல்லாம் இறைவன் செயல் என்று நம்பியே அவள் அக்குழந்தையைத் தூக்கிச் சென்றாள்.

குழந்தை வளர வளர பெண்மணியின் வறுமை மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது. உரிய பருவத்தில் இருவருக்கும் உபநயனமும் செய்து வைத்தாள்.

ஒரு முறை இரு குழந்தைகளுடன் சாண்டில்ய முனிவரின் தரிசனத்திற்காக அந்தணத்தாய் சென்றாள். முனிவரை மனமுருகத் தரிசித்தாள். குழந்தைகள் பற்றியும் தன்நிலை பற்றியும் முனிவரிடம் கூறினாள். அவர் சிவமூர்த்திக்கு மிகவும் உகந்ததாகிய பிரதோஷ தரிசனம் தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் துன்பங்கள் மறைந்து நல்வாழ்வு மலரும் என்று ஆசி வழங்கினார்.

பெண்மணி முனிவர் கூறியபடி பிரதோஷப் பூஜை சிறப்பாகச் செய்து தரிசனமும் செய்து வந்தாள்.

ஒருமுறை அத்தாயின் இரு பிள்ளைகளும் வெளியே சென்றிருந்தார்கள். அப்பொழுது அந்தணச் சிறுவன் தங்கம் நவரத்தினம் பொற்காசுகள் நிரம்பிய குடத்தைப் புதையலாகக் கண்டெடுத்தான். இருவரும் கொண்டு வந்து அன்னையிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னார்கள். அவள் இருவரையும் பங்கு போட்டு எடுத்துக்கொள்ளும்படி சொன்னாள். தர்மகுப்தனோ அதை அண்ணன்தான் கண்டெடுத்தான். அண்ணனுக்கே அது உரியது: எனக்கு வேண்டாம் என்று சொன்னான் இதனால் தர்மகுப்தன் தங்களை விட்டுப் போய்விடுவானோ என்று அஞ்சினாள் அத்தாய். மகனோ என்றும் தாயைப் பிரியேன் என்று பரிவுடன் கூறினான்.

ஒருமுறை காட்டுப்பகுதியில் தன்தோழியருடன் குளத்தில் நீராடிவிட்டு வெளிவந்த ஓர் அழகிய மங்கையைக் கண்டு தர்மகுப்தன் உள்ளத்தை பறிகொடுத்தான். அவளும் அவனை விரும்பினாள்.
அவள் ஒரு கந்தர்வ மன்னனின் மகள் பெயர் அஸ்ரூமதி

பூலோக வாசிகளைத் தேவகுலத்தைச் சார்ந்த கந்தர்வப் பெண்கள் திருமணம் செய்துகொண்டு வாழும் முறை கிடையாது. அதனால் அதிர்ச்சியுற்ற கந்தர்வ மன்னன் கயிலாயம் சென்று பரமனைத் தரிசித்துத் தன் மகளின் காதல் செய்தியைக் கூறிமுறையிட்டான். அதைக் கேட்டருளிய பரமன் தர்மகுப்தன் ஷத்திரியன் என்றும், அவனுக்கு அஸ்ரூமதியைத் திருமணம் செய்து வைத்து இழந்த நாட்டை மீட்க படையுதவியும் செய்யும் படி கூறினார்.

கந்தர்வ மன்னன் சிவபெருமான் கூறியபடியே செய்தான். இழந்த நாட்டை மீண்டும் பெற்று தர்மகுப்தனும் அஸ்ரூமதியும் அரசன் அரசி ஆனார்கள். தன்னை அன்புடன் வளர்த்த தாயையும் சகோதரனையும் முன்னிலும் அதிகமாக நேசித்து அவர்களுக்கும் அரசவாழ்க்கை கொடுத்தான்.

சாண்டில்ய முனிவர் தர்மகுப்தன் அரண்மனைக்கு எழுந்தருளினார். அவரை பயபக்தியுடன் வரவேற்று உபசரித்தான் தர்மகுப்தன். பிறகு தான் ஷத்திரியகுலத்தில் பிறந்தும், கொடிய துன்பத்திற்கு ஆளானதேன்? என்று அவன் முனிவரிடம் கேட்டான். அதற்குத் தந்தை செய்த பாவமே காரணம் என்றும் அந்தணத் தாயுடன் தர்மகுப்தனும் பிரதோஷ பூஜை தரிசனம் செய்து வந்ததால் பாவம் நீங்கி புண்ணியம் மலர்ந்து இழந்த அரசும் கிடைத்தது என்றும் கூறினார்.

சனிப்பிரதோஷமாகிய மகாபிரதோஷ மகிமை கூறும் வரலாறு (வரதுங்க பாண்டியர் அருளியது)

ஒரு காலத்தில் சந்திரசேனன் என்னும் அரசன் உஜ்ஜயினியை ஆண்டுவந்தான். ஸ்ரீ மாகாளேசுரரை வணங்கும் விரதம் பூண்டான். ஒருமுறை மாணிபத்திரன் என்னும் கணநாதன் ஒருவன் வந்து அவனுடன் நட்பு பூண்டான். அவன் பிரியும் போது நட்புக்கு அடையாளமாகச் சிந்தாமணி என்னும் ரத்தினத்தை அளித்துச் சென்றான்.

சந்திரசேனனின் பகைவர்கள் ஒன்று சேர்ந்து அந்த ரத்தினத்தைக் கைப்பற்ற எல்லையில் வந்து முற்றுகை இட்டனர். சிவபிரானையே பெரும் பலமாகக் கருதும் சந்திரசேனன் ஆலயம் சென்று ஸ்ரீகாளேசுரரை எண்ணித் தியானம் செய்தான் அன்று சனிப்பிரதோஷம்.

ஒரு பெண்மணி, அப்பொழுது தான் இளம் மகனுடன் வந்து ஸ்ரீகாளேசுரரை வணங்கிச் சென்றாள்.

தாயுடன் இல்லம் சென்ற சிறுவன், மன்னன் ஆலயத்தில் செய்த தியானத்தைப்போல் தானும் கற்பனையாகச் செய்ய எண்ணி, ஏதோ ஒரு கல்லைத் தன் முன் லிங்கமாக வைத்துக் கண்களை மூடிக்கொண்டு இருந்தான். அப்பொழுது அன்னை உணவுண்ண அழைத்தாள். அவன் போகவில்லை. அதனால் அங்கு வந்த தாய் கடுங்கோபத்துடன் சிறுவன் லிங்கமூர்த்தியாகப் பாவனை செய்த கல்லைத் தூக்கி எறிந்து விட்டுச் சென்றாள். அதைக் கண்ட சிறுவன் மூர்ச்சித்து விழுந்தான்.

சிறிது நேரத்தில் கண்விழித்த சிறுவன் தனக்கு முன் நவரத்தின லிங்கமூர்த்தி ஜொலிப்பதையும் வீடெல்லாம் செல்வவளம் செழித்திருப்பதையும் கண்டு அதிசயித்தான். தாய் மகிழ்ந்து அன்று சனிபிரதோஷ நாளாகையால் தன் மகன் செய்த பிரதோஷநாள் பூஜைபலனே செல்வ வளத்திற்குக் காரணம் என்று தன் செயலுக்கு வருந்தினாள்.

சிறுவன் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்று மன்னன் சந்திர சேனன் வந்து, சிறுவன் முன் இருந்த லிங்கமூர்த்தியை வணங்கினான். இதையெல்லாம் ஒற்றர் மூலம் அறிந்த மன்னனின் பகைவர்கள், எல்லாவற்றிற்கும் சந்திரசேனன் செய்த சனிப்பிரதோஷ மகிமையே காரணம் என்று நம்பி பகைமையை விட்டு நட்புப் பூண்டனர்.

இதுவரை பிரதோஷவிளக்கம், மகிமை, பலன், பயனடைந்தோர் வரலாறுகள் ஆகியவற்றை முறையாக அறிந்தீர்கள்.

### இப்பொழுது பிரதோஷ பூஜை தோன்றிய வரலாறு

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே அடிக்கடி போர்நிகழும். அசுரர்களினால் தங்கள் குலம் அழிந்து விடுமோ என்ற அச்சம், பயம், குழப்பம், தேவர்களின் உள்ளத்தை வாட்டியது. முதுமை மரணம் தங்களை அணுகாமல் என்றும் இளமையோடு நித்திய ஜீவிகளாக வாழ ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று திட்டமிட்டனர்.

தேவர்கள் அனைவரும் சென்று பிரம்மாவிடம் தங்கள் திட்டத்தைத் தெரிவித்தனர். பிரம்மா அனைவரையும் அழைத்துக்கொண்டு திருமாலிடம் சென்று தேவர்களின் கருத்தை வெளியிட்டார்.

பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வரும் அமிர்தத்தை உண்டால் முதுமை மரணம் இன்றி என்றும் இளமையோடு வாழலாம் என்று திருமால் கூறினார்.

திருமால் குறிப்பிட்டபடி அமிர்தம் பெற முடிவு செய்யப்பட்டது. மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைய பிரம்மாவும் தேவர்களும் ஏற்பாடு செய்தனர். அசுரர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் கலந்து கொள்ள வந்தனர்.

திருமால் தந்திரமாக தேவர்கள் வால்பக்கமும் அசுரர்கள் தலைப்பக்கமும் நின்று பாற்கடலைக் கடைய ஏற்பாடு செய்தார். திருமால் ஆமை வடிவெடுத்து கடலுக்கடியில் சென்று மந்தர மலையைத் தாங்கினார்.

தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைய தொடங்கியது தசமித்திதி காலையிலாகும்.

தொடர்ந்து கடைந்து கொண்டே இருந்தனர். இரவு கழிந்து, அடுத்த நாள் ஏகாதசி காலையில் வாசுகி வலி பொறுக்க முடியாமல் விஷத்தைக் கக்கியது. கடலில் இருந்தும் விஷம் தோன்றியது. ஆலம் என்றால் விஷம் வாசுகியின் ஆலமும் கடலில் தோன்றிய ஆலமும் சேர்ந்து ஆலாலமாகி புகை மண்டலம் போல் வடிவெடுத்தது. அதன் அனல் கொடுமை தாங்கமுடியாமல் தேவர்களும் மற்றவர்களும் சிதறி ஓடினர். ஆமை வடிவம் விடுத்து மேலே வந்த திருமாலின் பளிங்கு நிறமும் விஷ புகையால் கருநிறமாக மாறியது. சிவபிரானிடம் புகலிடம் அடைய திருமால், பிரம்மா, தேவர்கள் ஆகியோர் கயிலை நோக்கி ஓடி வலமாகச் செல்ல முயன்றனர்.

அவர்கள் கயிலையை வலம் செய்ய முடியாமல் விஷமண்டலம் பரவித் தடுத்தது. அதனால் அப்ர தட்சணம் இட்டு ஓடினர். சிறிது தூரம் சென்றதும் அங்கும் வந்து விஷமண்டலம் தாக்கவே மீண்டும் திரும்பி ஓடி வந்தனர். இப்படித் தேவர்கள் அன்று கயிலையை அப்ரதட்சணம் வந்த காரணத்தால் தான் சிவாலய பிரதோஷ நாளன்று இன்று அப்ரதட்சணம் வரும் முறை பின்பற்றப்படுகிறது. இதுவே சோமசூத்ர பிரதட்சணம் ஆகியது.

பிறகு தேவர்கள் ரிஷப தேவரின் உதவியுடன் பரமனைத் தரிசனம் செய்தனர். தங்கள் செயலையும் ஆலாலத்தின் கொடுமையும் கூறித் தங்களைக் காக்கும்படி வேண்டிக் கொண்டனர். கருணையே வடிவான எம்பெருமான் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்டார்.

அருகே அணுக்கத் தொண்டராக நின்ற சுந்தரரிடம் ஆலாலத்தைத் தாங்கி வரும்படி பணித்தருளினார் அவர் சென்று விடத்தை நாவற்பழம் வடிவில் திரட்டிப் பரமனிடம் கொண்டு வந்து தந்தார்.

பரமன் அவ்விடத்தைத் திருவாயில் இட்டு விழுங்கத் தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினர். அவ்விஷம் உள்ளே சென்றால் அங்கிருக்கும் எண்ணற்ற ஜீவகோடிகள் அழிந்துவிடும். உமிழ்ந்தாலும் புறவுலகிலுள்ள ஜீவகோடிகள் அழிந்து விடும். இந்த நிலையில் பக்கம் இருந்த உமாதேவியார் தம் இளந்தளிரன்ன கரத்தினால் கண்டத்தில் மெல்ல அழுத்தித் தடவ விஷம் மேலும் செல்லாமல் தங்கி அம்பிகையின் மகிமையால் அமிர்தத் தன்மை பெற்றது. அன்று முதல் சிவபிரான் "மணிகண்டன்" என்றும் "திருநீலகண்டன்" என்றும் அழைக்கப்பெற்றான். தேவர்கள் அச்சம் நீங்கினர். பின்னர் மீண்டும் சென்று பாற்கடலைக் கடையுமாறு சிவபிரான் திருவாய் மலரத் தேவர்கள் அங்கிருந்து சென்றனர்.

ஏகாதசி திதியில் மீண்டும் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையத் தொடங்கினர். இரவு முழுதும் பாற்கடலைக் கடையத் தொடங்கினர். இரவு முழுதும் கடைந்து கொண்டே இருந்தனர்.

முதலில் பாற்கடலில் இருந்து வெளிப்பட்ட இலக்குமியைத் திருமால் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து வெளிப்பட்ட ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி, கௌஸ்துமணி, சூடாமணி உச்சைச்வரம் என்ற குதிரை முதலியனவற்றை இந்திராதி தேவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஏகாதசி இரவு கழிந்து மறுநாள் துவாதசி அன்று அதிகாலையில் கடலில் இருந்து அமிர்தம் தோன்றியது. அதனைத் தேவர்கள் பகிர்ந்து உண்டனர். அமிர்தம் உண்ட மகிழ்ச்சியில் அன்று முழுவதும் தேவர்கள் ஆடியும் பாடியும் பொழுது போக்கினர்.

மறுநாள் திரயோதசி (13-ஆம்நாள்) அன்று தேவர்கள் முதலில் சிவபிரானை வணங்காமல் ஆடியும் பாடியும் பொழுது போக்கியதற்காக வருந்தினர். அனைவரும் சென்று பரமனிடம் தங்கள் குற்றத்துக்காக மன்னித்து விடுமாறு வேண்டினர். பரமன் தயாநிதி அல்லவா?

தேவர்களை மகிழ்விக்கத் திருவுளங்கொண்ட பரமன் அம்பிக்கை காணும்படி ரிஷபதேவரின் கொம்புகளுக்கிடையே நின்று ஆனந்த தாண்டவம் ஆடியருளினார். அதனால் தான் பிரதோஷ நாளன்று ரிஷப தேவரின் கொம்புகளுக்கிடையே பார்த்து லிங்க மூர்த்தியைத் தரிசிக்கும் முறை பின்பற்றப்படுகிறது. அவர் ஆடிய நேரமே பிரதோஷ வேளை.

ஆண்டவனின் திருநடனம் கண்ட தேவர்கள் தங்கள் அச்சம், பயம், குழப்பம், தோஷம், யாவும் அறவே நீங்கித் தெளிவும் மகிழ்ச்சியும் பெற்றனர். அன்று தேவர்கள் பெற்ற பலனை இன்று பிரதோஷ தரிசனத்தின் மூலம் அருளன்பர்கள் பெறுகிறார்கள்.

பரமன் இவ்வாறு தேவர்களுக்காகத் திருநடனம் ஆடியது சனிக்கிழமை ஆகும். ஆகையினால்தான் சனிப்பிரதோஷம் சிறப்புடையது என்றும் மகாப்பிரதோஷம் என்றும் போற்றப்படுகிறது.

பிரதோஷ நாளன்று திருமால் கயிலாயத்தில் இருந்ததை நினைவூட்டும் வகையில் இன்றும் ஒவ்வொரு பிரதோஷ நாள் மாலையிலும் பெருமான் கோவிலில் திரையிட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஐதிகம் பின்பற்றப்படுகிறது.

## பிரதோஷ வழிபாட்டின் மகிமை

சிவபெருமான் பிரதோஷ காலத்தில் இடப தேவரின் இரு கொம்பு களுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டு திருநடம் புரிந்தார். அப்பொழுது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் ஊதினார். பிரத தேவர் தாளம் போட்டார். இலக்குமி தேவி பாடினாள். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் யஷர்கள் கின்னரர்கள் திசைபாலர்கள் முதலிய அனைவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறைவனை வழிபடுகின்றார்கள்.

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
　　இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானரா நாகம்
　　வசுக்கள் வானவர் தானவரெல்லாம்
அயர்ப் பொன்றின்றி நின் திருவடியினை
　　யர்ச்சித் தாற் பெறு மாரருள கண்டு
திகைப் பொன்றின்றி நின் திருவடியடைந்தேன்
　　செழும் பொழில்திருப் புன் கூருளானே.

- சுந்தரர்

தேவர்கள் பிரதோஷ வழிபாடு செய்வதோடன்றி அவ்வழிபாட்டிற்கு தாங்களே முன் வந்து உதவுகிறார்கள் என்பதை பிரமோத்தர காண்டம் தெரிவிக்கிறது.

வாக்தேவீ த்ருதவல்லகீ சதமகோ
வேணும் தகத் மத்மஜ
தாலோன் னித்ரகரோ ரமா பகவதீ
கேயப்யோ காஞ்சி தா
விஷ்ணுஸ் ஸாந்தா மருதங்க வாதனபடுர்
தேவாஸ் ஸமந்தாத் ஸ்திதா
ஸேவந்தே தமனுப் பிரதோஷ ஸமயே
தேவம் ம்ருடானி பதிம

சரஸ்வதிதேவி இந்திரன் பிரமதேவன் திருமால் இலக்குமி இவர்கள் எல்லோரும் இதில் கலந்துகொள்கிறார்களென இச்சுலோகம் தெரிவிக்கிறது.

1. வாக் தேவீ - சரஸ்வதி
த்ருத- (தனது கையில்) வைத்துக் கொண்டு
வல்லகி - வீணை வாசிக்க

2. சதமகோ - இந்திரன்
வேணும் - புல்லாங் குழலை
ததத - தன்னிடம் வைத்துக் கொண்டு ஊத
3. பத்மஜ - பிரம தேவன்
தால - தாளத்தை
உன் நித்ரகா - கையால் அடித்துக்கொண்டிருக்க

4. ராம பகவதீ - இலக்குமி தேவி
கேயம் - பாடல்களை
ப்ரயோக அஞ்சிதா - தீவிரமாகப்பாடிக் கொண்டிருக்க

5. விஷ்ணு - திருமாலானவர்
ஸாந்தர மிருதங்க - சிறந்ததொரு
மிருதங்கத்தை
வாதன படு - சிறந்தவகையில் கொட்டிக் கொண்டிருக்க
மிருடானி - பார்வதி தேவியாரின்
பதிம் - பதியாகிய
தம்தேவம் - அத்தகைய சிவபெருமானை
அனுப்பிரதோஷ ஸமய - ஒவ்வொரு பிரதோஷ சமயத்திலும்

6. தேவ - தேவர்கள்

ஸமந்தாத் - எல்லாப் புறங்களிலும்

ஸ்திதா - நின்று கொண்டு

ஸேவந்தே - பக்தி பூர்வமாக வழிபடுகிறார்கள்

இவ்வாறு சிவபெருமான் செய்த திருநடனத்தின் போது திருமால் மத்தளம் வாசித்தனர். பிரமதேவர் தாளம் இட்டனர். இதனை அடியில் வரும் பாடலால் அறிக.

"வரத்தின் அருள்பெற்ற மத்தளமாயோன் தன்
கர்த்தினனி பொத்திக் களிப்ப - நரைத் தலையோன்
தாளம் பிடிக்க"

- கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டுவிடு தூது

பிரதோஷ வழிபாடு செய்தால் வறுமை பயம், பாவம், மரண வேதனை இவையெல்லாம் ஒழிந்து விடும் நலம் பல விளையும்.

இரண நல்குர விரும்பவ மிரும்பசி யுரோகம்
அரணுறும் பயங் கிலேசங் கேதமவ மிருத்து
மரண வேதனை யிவையெலா மகற்றென வணங்கி
புரணநாதனைப் பிரதோடத்திற் போற்றிடத்தகுமால்

- கடம்பவன புராணம்

பிரதோஷ காலத்தில் அடியிற் கண்ட தேவாரங்களை ஓதுக.

நாகத்தான் கயிறாக நளிர்வரையதற்கும் மத்தாகப்
பாகந்தேவ ரொடகரர் படுகடலின் யெமக் கடைய
வேநஞ்செழவாங்கே வெருவொடுமிரீந்தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர்தமாக்கு வித்தானமறைக்காடே

- திருஞானசம்பந்தர்

பருவரை ஒன்று சுற்றி அரவங்கைவிட்ட
இமையோ ரிரிந்து பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு
கடுவா னெழுந்து விசை போய்ப்
பெருகிட மற்றிதற்கொர் பிதிகாரமொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவனண்ட ரண்டர் அரசே

- திருநாவுக்கரசர்

"கோல் வரை மத்தென நாட்டிக்
கோரளவு சுற்றிக் கடைந்தெழுந்த
ஆல நஞ்சு கண்டவர் மிக விரிய
அமரர்கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்தே பித்த நீ செய்த
சிலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே"

- சுந்தரர்

கோலால மாகிக் குரைகடல் வாயன் றெழுந்த
ஆலால முண்டா வைன் சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிலனேல் அயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் விடுவகாண் சாழலோ

- மாணிக்கவாசகர்

இனியோ நாமுய்ந்தோம் இறைவன் தாள்சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப்பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்.

- காரைக்கால் அம்மையார்

அடியவராம் இமையவர்தம் கூட்ட முய்ய
அலைகடல் வாய் நஞ்சுண்ட அமுதே செங்கண்
நெடியானும் நான்முகனும் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர்வாசக்
கடியாரும் மலர் சோலை மருங்கு சூழும்
கவின் மருகற் பெருமானே! காவாய் என்றும்

- பெரிய புராணம்

உலகில் செல்வம் உடையவர் சிலர். வறியவர், பலர் இதற்கு என்ன காரணம்.

இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்

- திருக்குறள்

இறைவனை நினைத்து உணர்ந்து நோற்பார் மறுபிறப்பில் தனவந்தராக இனிது வாழ்வார்கள் அல்லாதவர் வறுமையில் வாடுவார்கள். ஆதலால் விரதத்தின் அவசியம் விளங்குகின்றது. சனிக்கிழமை தவிர மற்ற கிழமைகளில் வரும் பிரதோஷ தினத்தன்று பிரதோஷம் வேளையாகிய மாலை 4 மணி முதல் 6 மணிவரை சிவாலயத்தில் ஆலயவழிபாடு செய்தால் ஒருவருடம் ஆலயம் சென்று இறைவழிபாடு செய்த பலனும் சனிப்பிரதோஷத்தன்று பிரதோஷ வேளையில் சிவாலயத்தில் இந்த புத்தகத்தில் உள்ளவாறு இறைவழிபாடு செய்தால் ஐந்து வருடம் தினமும் தவறாமல் ஆலய வழிபாடு செய்த பலனும் கிடைக்கும். ஆதலால் எல்லோரும் பிரதோஷ விரதம் இருந்து பெரும்பேறு பெறுவார்களாக.


## ஈஸ்வர தியானம்

ஓம் நம சிவாய பரமேசவராய
சசி சேகராய நம ஓம்
பவாய குண ஸம்பவாய
சிவ தாண்டவாய நம ஓம்

# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ப்ரஹ்மமுராரி | ஸுரார்சித | லிங்கம் |
| | நிர்மலபாஸித | ஶோபித | லிங்கம் |
| | ஜந்மஜதுக்க | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 2. | தேவமுநி ப்ரவ | ரார்ச்சித | லிங்கம் |
| | காமதஹம் | கருணாகரா | லிங்கம் |
| | ராவண தர்ப்ப | விநாசந | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 3. | ஸர்வஸுகந்தி | ஸுலேபித | லிங்கம் |
| | புத்திவிவிர்த்தன | காரண | லிங்கம் |
| | ஸித்தஸுராஸுரே | வந்தித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 4. | கநக மஹாமணி | பூஷித | லிங்கம் |
| | பணிபதிவேஷ்டித | ஶோபித | லிங்கம் |
| | தஷஸுயக்ஞ | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 5. | குங்கும சந்தன | லேபித | லிங்கம் |
| | பங்கஜ ஹாரஸ் | ஸோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 6. | தேவகணார்ச்சித | ஸேவித | லிங்கம் |
| | பாவைர்பக்திபிர் | ஏவச | லிங்கம் |
| | திநகரகோடி | ப்ரபாகர | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 7. | அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| | ஸர்வ ஸமுத்பவ | காரண | லிங்கம் |
| | அஷ்டதரித்ர | விநாசித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 8. | ஸுரகுரு ஸுரவர | பூஜித | லிங்கம் |
| | ஸுரவநபுஷ்ப | ஸதார்சித | லிங்கம் |
| | பராத்பரம் | பரமாத்மக | லிங்கம் |
| | ததரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |





உ

சிவமயம்

# சிவபுராணம்

*காப்பு*

**திருச்சிற்றம்பலம்**

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகமென்னுந்தேன்.

**திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமம்ஆகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகனநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத் தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவர் உள் மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங் குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
சொல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறை யோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தான் னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார முதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாலிக்கும் ஆரியனே
நேய அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே அவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனே ஓ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக

என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல் லோபதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே

நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் பெருகிவரும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்காலைப் பொழுதெழுந்து

காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலோர்களெல்லாம் ஏற்றிஎமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



## திருவிளக்குப் பூஜை

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே

சோதி மணிவிளக்கே சீதேவி பொண்மணியே

அந்தி விளக்கே அலங்கார நாயகியே

காந்தி விளக்கே கமாஷித் தாயாரே

பசும்பொன் விளக்குவைத்துப் பஞ்சுத் திரிபோட்டு

குளம்போல் எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்

ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க

வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான்விளங்க

மாளிகையில் சோதியுள்ள மாதாவைக் கண்டுவந்தேன்

தரணியிலே சோதியுள்ள தாயாரைக் கண்டு வந்தேன்

மாங்கல்யப் பிரச்சை மடிப்பிச்சை தாருமம்மா

சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா

பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா

பட்டி நிறையப் பால்பசுவைத் தாருமம்மா

கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாருமம்மா

பக்கத்தில் நில்லுமம்மா புகழ்மாலை தாருமம்மா

அல்லும் பகலும் என்றன் அண்டையிலே நில்லு அம்மா

சேவித் தெழுந்திருந்தேன் தேவி வடிவம் கண்டேன்

வச்சிரக் கிரீடம் கண்டேன வைடூர்ய மேனி கண்டேன்

முத்துக் கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலை கண்டேன்

சுவுரி முடி கண்டேன் தாழைமடல் சூடக் கண்டேன்

பின்னல் அழகு கண்டேன் பிறைபோல நெற்றி கண்டேன்

சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவம் கண்டேன்

குறுக்கிடும் நெற்றி கண்டேன் கோவைக்கனி வாயும் கண்டேன்

கமலத் திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்

மார்பில் பதக்கம் மின்ன மாலை அசையக் கண்டேன்

கைவளையல் கலகலென்னக் கணையாளி மின்னக் கண்டேன்

தங்க ஒட்டியாணம் தகதகவென றொளிரக் கண்டேன்

காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்

மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டேன்யான்
அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயான உன்றன் தாள்களிலே சரணம் என்றேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.

## சரஸ்வதி துதி

வாணி கலைத் தெய்வம் மணிவாக்கு உதவிடுவாள்
ஆணி முகத்தைப்போலே அறிவுமுத்து மாலையினால்
காணுகின்ற காட்சியெல்லாம் காண்பதுவே காட்டிடுவாய்
தாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தி னுள்ளே
இருப்பள் இங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செய் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோய் கையும் துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லுஞ் சொல் லாதோ கவி.

## சிறுப்பிட்டி வல்லையம்புலம்
## கருணாகடாக்ஷி (மனோன்மணியம்மை)
## ஆவரங்கால் ஸ்ரீ சு.அம்பலவாணப்பிள்ளை அவர்களால்
## இயற்றப்பட்டது. (1919)

### வெண்பாக்கள்

சீரார் சிறுப்பிட்டி சேர்வல்லை யம்புலமார்
பேரார் கருணாக டாட்சியம்மை - பேரிறைவி
பொன்னூஞ்சல்பாட விடர்போக்கும் கணபதியாம்
முன்னோன் கழலிணையே முன்.

தென்னீழம் யாழ்ப்பாணத் தேயத் துறுநகரம்
மன்னுசிறுப்பிட்டி வல்லை யப்புலம் அம்மன் - துன்னுபரை
கருணா கடாட்சியம்மை யூஞ்சற் கவிசாற்ற
வருடா ரதிதுணையாய் வா.

### ஊஞ்சல்

திருமருவு நாதவிந்தாந் தம்பம் நாட்டித்
திரம்பரவு சத்தியருள் விட்டமோட்டி
வரமருவு மறைநாலுங் கயிறதாக
வளம்பெருகு முபநிடதம் பலகையாகத்
தரமருவு பிரணவநற் பீடத்தார்ந்து
சகமதனுக் குறுதிதரு தயையிற் சார்ந்து
களிகொள்வல்லை யப்புலத்திற் கவினின்மேவுங்
கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 1

சந்திரசூ ரியர்கவிதை தன்னைத் தாங்கச்
சாலவருணன் கரமதனிற் கவரியோங்க
மைந்துபெறு பூதரியம் பெரிதுமார்ப்ப
வளவியல்நல் லளகையர்கோன் இதி டூர்ப்பச்
சுந்தரமா ருதனாலால வட்டம்வாங்கச்
சுரர்கற்பக தருமலர்கள் சொரிந்திரங்கக்
கந்தமுப வனவல்லை யப்புலத்தின்
கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 2

சீராரு மந்திரர்பட்ட டைப்பையேந்தத்
திருநந்தி களாஞ்சிபிரம் பத்தந்தூங்க
வாராரு மரிபிரமா பன்னீரெற்ற
மடமின்னா ராலத்தி யாட்டிக்காட்ட
வேராரு மிமையத்தின் மகளாய் வந்த
விறைவியரே சித்திமுத்தி யீய்ந்துயிருக்
காராருங் கண்டனிடப் பாகமேவுங்
கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 3

ஆயும்வே தியர்வேத மன்பிற்கூற
வழகியசை வத்திநெறி யடர்ந்துவீறத்
தீயபர சமயமெலாஞ் சிதைந்துபாறத்
திகழுமணி நீறுசினந் தேங்கியூரப்
யாபுமரம் பையர்நடனஞ் சதியொடாடப்
பன்னுமுயர் கின்னராயாழ் பண்ணிற்பாடக்
காயுமலா தீதனரன் பாகமேவுங்
கருணா கடாட்சியம்மே பண்ணிற்பாடக்
காயுமலா தீதனரன் பாகமேவுங்
கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 4

ஈசனார்க் கில்லாகி வாமம்மேவி
யியம்பரிய வரம்பிலின்ப மிசைந்துகூடிப்
பேசுகய முகனையறு முகனைந்தந்து
பிறப்பறுக்குஞ் கருணையுல கிற்குக்காட்டித்
தேசமெங்கும் பூமணம்போற் செறிந்துறைந்து
தெளிவுதரு ஞானசிவா னந்தம்பூத்துக்
காசிவல்லை யப்புலத்திற் கவினின்மேவுங்
கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 5

எண்ணவரு முனிவர்க ளாசிசொல்ல

வெழிற்றரும தானங்க ளினிதிற்புல்லப்

பண்ணொடுத்தும் புருமுனியு மிசைகொண்டாடப்

பக்தர்குழாம் பரிவொடுபல்லாண்டு நீடத்

தண்ணுலவு சிவாகமத்தின் சத்தஞ்சேரத்

தகையதவ ரானந்தத் தாரைவாரக்

கண்ணியமுக் கண்ணனிடப் பாகமேவுங்

கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 6

கொன்னதிரு வாசனதே வாரமார்ப்பத்

துலங்குமிளிர் தீபநிரை யிருள்கால்சீப்ப

மன்னுமணி சங்குகலத் தொலிவிண்ணாட

வருபாச பாவவினை யாவுமோடத்

தன்னிகரில் கணநாதர் தாவென்றாடத்

தயங்குகொடி வரிசைமுகி றடவியாடக்

கன்னமுறு வனவல்லை யப்புலத்தின்

கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 7

நஞ்சாகி நமன் நம்மை நணுகும்போது

நாமெல்லாம் மரணவே தனையானைந்து

துஞ்சாம லஞ்சலென்றாந் துணையுமாகித்

தூயமுகந் தந்தெமது துரிசுநீக்கி

யெஞ்சாத கதியுதவும் உலகமாதே

யினியசெப வடம்பதும மிணங்கியாடக்

கஞ்சமலர் வாவல்லை யப்புலத்தின்

கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 8

செயிரில்சிவ காமியம்மே யாடீரூஞ்சல்

செல்வமெலாந் தந்தருளா யாடீரூஞ்சல்

துயரில்சிவ சமேதமதா யாடீரூஞ்சல்

தூயவளே சுதர்மகிழ வாடீரூஞ்சல்

அயல்விலப யம்வரதத் தாடீரூஞ்சல்

ஆவியெலா முய்ந்தருள வாடீரூஞ்சல்

கயமுயர்சங் கரலாம பாகமேவுங்

கருணா கடாட்சியம்மே யாடீரூஞ்சல் 9

நன்னலமா ருலகமெலா நயந்துவாழி

நான்மறையா கமம்மறையோர் நாளும்வாழி

துன்னுமர சினர்வசியர் பின்னோர்வாழி

சுத்தசிவ சமயநெறி மணியும்வாழி

பன்னுமறம் பூதியெழுத் தைந்தும்வாழி

படிப்போர்கள் கேட்போர்கள் பரிவின்வாழி

கன்னல்வல்லை யப்புலமும் வாழிவாழி

கருணா கடாட்சியம்மே வாழி வாழி 10

## எச்சரீக்கை

செயவல்லைப் புலம்வாய்ந்திடு செவ்வீயெச்சரீக்கை
சேஎலான்முகில் புரைகண்குழ தேவீயெச்சரீக்கை

தயையின் வினையோட்டிக்கதி தருவாயெச்சரீக்கை
தானாகியெல் லாம்நின்றிடு தாயேயெச்சரீக்கை
சிவனோடுயர் விடைமேல்வரு சிலையேயெச்சரீக்கை
தீயோர்மனத் தமராதிரி தேனேயெச்சரீக்கை

தவமேலவர் மனத்தார்க்கு தலைவீயெச்சரீக்கை
தருமத்தை வளர்க்குஞ்சக வாயீரயெச்சரீக்கை

## பராக்கு

ஆங்காரக் குறும்பகற்று மன்னேபராக்கு
அடியரிடர் தீர்த்தருளு மாதீபராக்கு

ஓங்காரத் துட்பொருளா யுதித்தாய்பராக்கு
உத்தமியே சித்தத்தி லுறைவாய்பராக்கு

அரிபிரம ரமர்புக ழுருளேபராக்கு
அண்டங் ளெவைகளையும் அளித்தாய்பராக்கு

துரியா திதத்துறையுஞ் சுகமேபராக்கு
துகடீருங் கருணாகடாட்சீ பராக்கு

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - நித்தியசுப
மங்களம் மங்களம் மங்களம்

பொன்னணிகள் பூண்டவட்குப்
போதாவடி வானவட்கு
நன்னயஞ்சேர் நாயகிக்கு
நாதாந்த மானவட்கு .... மங்களம்

பக்தர்தொழு தாளவட்கு
பயில்பணைவெல் தோளவட்கு
வித்தங்கொ ளுத்தமிக்கு

ஆதியந்த மில்லவட்கு
ஆருயிரை யாள்பவட்குக்
கார்கொள் கண்டன் காதலிக்குக்
கருணா கடாட்சிக்கு....மங்களம்

சித்தத்துயர் தீர்ப்பவட்குத்
தீமைதனை மாய்ப்பவட்குத்
கத்தும்பரி பூரணிக்குக்
கருணா கடாட்சிக்கு... மங்களம்





































































































# அருள்மிகு சிறுப்பிட்டி வல்லையப்புலம் ஸ்ரீ கருணாகடாக்ஷி (மனோன்மணி) அம்பாள் தேவஸ்தானம்

## சம்புரோக்ஷண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்-2014

| கிரியைகள் ஆரம்பம் | எண்ணெய்க்காப்பு | மஹா கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 29.08.2014 வெள்ளிக்கிழமை | 30.08.2014 சனிக்கிழமை | 31.08.2014 ஞாயிற்றுக்கிழமை |

கருங்கதலி பெருங்குலைகள் களிற்றுகைம் முகம் காட்டும் மருங்குவளர் கதிர் செந்நெல் வயல் புரவி முகம் காட்டும் யாழ்ப்பாணத்தின் சிற்றூராம் சிறுப்பிட்டியின் வல்லையப்புலம் பதியின் நாற்றிசைகளின் நடுவிலே அடியார்களின் அல்லல் அகற்றி அருள்பாலிக்கும் லிங்கேஸ்வர பூஜிதவாசினியான கருணாகடாக்ஷி அம்பாளுக்கு சம்புரோக்ஷண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் (31.08.2014) ஞாயிற்றுக்கிழமை சஷ்டிதிதியும், சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடியுள்ள காலை 9.30 மணிமுதல் 10.25 வரையுள்ள கன்னிலக்கின சுப முகூர்த்த வேளையில் நடைபெற பேரருள் கிட்டியுள்ளது.

சிறுப்பிட்டி வல்லையப்புலம் குடிகொண்ட அம்மன் அருளினை அறிந்தாரோ என்னவோ அந்த அவதார புருஷன் ஏகபத்தினி விரதன் இராமபிரானே ஸ்ரீ கருணாகடாக்ஷி அம்மனை வணங்கி, மன்னுயிர் போக்கும் அம்பினை மண்ணிடை எய்து ஊற்றெடுத்து தாகம் தணித்தாரென கர்ண பரம்பரைக் கதைகளாக காலம் காலமாக சொல்லப்பட்டு வந்துள்ளது. இராமபிரானின் அம்பு பட்டதன் பயன் அக் கிணற்றின் நீர் ஊற்றானது என்றும் வற்றியது இல்லை. அதன் ஆழத்தினையும் அறியமுடியாது உள்ளது. இதுவே இவ் ஆலயத்தின் புராதன முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தொன்று தொட்டுக் கூறப்பட்டு வருகின்றது.

எம் தாய்க்கு துஷ்ரர்களால் 23.06.2014 இடம்பெற்ற அனர்த்தம் காரணமாக புதுப்பொலிவுற நூதன விக்கிரக ஆலயப்பிரவேசமும் ஆவணி நன்நாளாம் இந்நாளில் இந்தியாவின் புண்ணிய நதியாம் நர்மதா நதிக்கரையில் முற்றும் துறந்து சித்தமடக்கிய சித்தர்களின் தவத்தின் பயனாக காசி விஸ்வநாதப் பெருமானின் பிரதி விம்பமான லிங்கேஸ்வரர் சந்திரசேகர மூர்த்தமாக காட்சியளிப்பதற்காக நூதன விக்கிரக பிரதிஷ்டையுடன் நவக்கிரக நாயகர்களுக்கும் நூதன ஆலயம் அமைத்து நூதன விக்கிரக பிரதிஷ்டையும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவினை சிறப்பிப்பதற்காக தேவஸ்தான பரம்பரை ஆஸ்தானகுரு வேதாகம வித்தகர் குருமூர்த்திக்குருக்களின் புதல்வன் பிரம்ம ஸ்ரீ காமாட்சி சுந்தரேஸ்வர குருக்களும் வேல்ஸ் (U.K) ஸ்ரீ கற்பக விநாயக தேவஸ்தான ஆஸ்தான குரு முத்தகர் வித்தகன் சிவாச்சாரிய சிரோன்மணி சிவஸ்ரீ லம்போதர குருசுவாமிக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருக்களாக வீற்றிருக்கவும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலய பரம்பரை குருத்துவத்தினைக் கொண்ட சிரோன்மணி-சிவாகம பூஷணம் சிவஸ்ரீ சந்திரசேகர சிவாச்சாரியார் அவர்கள் சர்வசாதக ஆசிரியராக இருந்து மந்திரங்கள் ஒலிக்க மங்கல வாத்தியங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இவ் வேளையிலும் அதற்கு முன்னரும் நடைபெறவிருக்கும் கிரியைகளிலும் அம்பிகை அடியார்கள் பங்குபற்றி அம்பிகையினதும் காசி விஸ்வநாதப் பெருமானினதும் பேரருளினைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(26649)(4.3.6)

**தேவஸ்தான தர்மகர்த்தாக்களும், பரிபாலனசபையினரும்.**

கோப்பாய் பிரதேசத்தின் அச்சுத்துறையில் முன்னணிப் பதிப்பகம்

**சகல விதமான அச்சுவேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய முன்னணிப் பதிப்பகம்**

# தர்சா தமிழ்ப் பதிப்பகம்

Sinc 2003

THARSA
TAMIL
PRINTERS

tharshaoffset@yahoo.com
ttpatchuvely@gmail.com
Tharsa Tamil Printers
tjana18

ஆவரங்கால் சந்தி,
அச்சுவேலி.
021 205 8206
077 2583728

ஆஸ்பத்திரி முன்பாக,
அச்சுவேலி.
077 2583728

# சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம்

## நித்திய பூஜை நேரங்கள்

உஷக்கால பூஜை - 7.30 (காலை)

உச்சிக்கால பூஜை - 11.30 (மதியம்)

சாயரட்சை பூஜை - 5.00 (மாலை)

மேலதிக பூஜைகள் தொடர்பான விபரங்களுக்கு
தேவஸ்தானப் பிரதமகுருக்களுடனும்,
தேவஸ்தான பரிபாலன சபையினருடனும்
தொடர்பு கொள்ளவும்.

THARSA TAMIL PRINTERS
ஆவரங்கால் சந்தி.
021 2058206